REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

E Paper

2023 டிசம்பர் 30 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

වරු. 91 இல. 310 | Saturday 30, December, 2023 | 10பக்கங்கள்

## GCE A/L பரீட்சைக்கான வகுப்புகள், கருத்தரங்குகள்

### நேற்று முதல் தடை

2023 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான வகுப்புகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை நடத்துவது நேற்று (29) நள்ளிரவு முதல் பரீட்சை முடியும் வரை தடை செய்யப்பட்டது.

இந்த காலப்பகுதியில் மாதிரி வினாத்தாள் விநியோகம் மற்றும் 06

---

குழந்தைகள் மத்தியில் அம்மை நோய்

## ஆறு முதல் 09 மாதக் குழந்தைகளுக்கு தடுப்பூசி திட்டம் ஜனவரியில் ஆரம்பம்

### சுகாதார மேம்பாட்டு பணியகம் அறிவிப்பு



ஆறு முதல் 9 மாதங்களுக்கிடைப்பட்ட குழந்தைகளுக்கு அம்மை நோய்க்கான தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் அறிவித்துள்ளது.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது. குழந்தைகள் மத்தியில் அம்மை நோய் அதிகளவில் பரவி வருவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் எதிர்வரும் ஜனவரி 06 ஆம் திகதி காலை 09 மணி முதல் மாலை 04 மணி வரை இடம் பெறவுள்ளதாகவும் 06

---

2023ஆம் ஆண்டில் இதுவரை

## அரசாங்க உர நிறுவனங்களில் 480 மில். ரூபா நிகர இலாபம்

### 420 ஊழியர்களுக்கும் போனஸ் கொடுப்பனவு

அரசாங்க உர நிறுவனங்களான லங்கா உர நிறுவனம் மற்றும் கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம் ஆகிய இரண்டு உர நிறுவனங்களும் 2023 ஆம் ஆண்டில் 480 மில்லியன் ரூபா நிகர இலாபத்தை ஈட்டியுள்ளன.

இதன்படி கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம் 360 மில்லியன் ரூபாவையும், லங்கா உர நிறுவனம் 120 மில்லியன் ரூபாவையும் இலாபமாக ஈட்டியுள்ளன.

அரசாங்கத்துக்கு சொந்தமான இரண்டு உர நிறுவனங்களின் வருமானத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் ஊக்கத்தொகை வழங்கவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். 06

---

## 2023இல் கலால் திணைக்களத்துக்கு 177 பில்லியன் ரூபா வருமானம்

### அரசு வழங்கிய இலக்கில் 98 வீதம் பூர்த்தி

2023 இல் இதுவரை இலங்கை கலால் திணைக்களம் 177 பில்லியன் ரூபாவை வருமானமாக பெற்றுள்ளதாகவும் இந்த வருடம் அரசாங்கம் வழங்கிய இலக்கில் 98 வீதத்தை பெற முடிந்ததாக கலால் திணைக்கள ஆணையாளர் நாயகம் சமன் ஜயசிங்க நேற்று (29) தெரிவித்தார்.

இந்த வருமானத்தைப் பெறுவதற்கு கலால் திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களும் பல்வேறு சவால்களை எதிர்கொண்டதாகவும், அதற்காக அவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

2024 இல் பல்வேறு இலக்குகள் மூலம் அதிக வருமானம் ஈட்ட பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

---

ஏனைய வரிகளை நீக்கி வரி மாற்றங்களை செய்து

# 'வற்' வரி திருத்தத்தின் தாக்கத்தை குறைக்க அரசு தீவிர நடவடிக்கை

### ஒரு குடும்பத்தின் மாதாந்த செலவு அதிகரிக்கும் என்ற கருத்து முற்றிலும் தவறு

### நிதி அமைச்சின் வரிக் கொள்கை ஆலோசகர் தனுஜா பெரேரா தெரிவிப்பு



**சிறப்பு வர்த்தக வரி விதிக்கப்பட்டுள்ள நெத்தலி, பெரிய வெங்காயம், கருவாடு போன்ற 65 வகையான பொருட்களுக்கு 'வற்' வரி தாக்கம் செலுத்தாது**

பெறுமதி சேர் வரி (வற்) உள்வாங்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் மீது விதிக்கப்பட்டுள்ள ஏனைய வரிகளை நீக்கி உரிய வரி மாற்றங்களைச் செய்து (வற்) திருத்தத்தின் தாக்கத்தை குறைப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக நிதி அமைச்சின் வரிக் கொள்கை ஆலோசகர் தனுஜா பெரேரா தெரிவித்தார்.

"பெறுமதி சேர் வரி (வற்) திருத்தச் சட்டம் மற்றும் அதன் தாக்கம்" என்ற தலைப்பில் நேற்று முன்தினம் (28) ஜனாதிபதி ஊடக நிலையத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நிதி அமைச்சின் வரிக் கொள்கை ஆலோசகர் தனுஜா பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதாரம் தொடர்பான விசேட அறிவுள்ள ஒரு சிலர் கூட ஜனவரி முதலாம் திகதி முதல் (வற்) அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் ஒரு குடும்பத்தின் மாதாந்தச் செலவு மேலும் 40,000 ரூபாவினால் அதிகரிக்கும் என்ற கருத்தை சமூக மயப்படுத்துவதாகவும், ஆனால் அந்த கருத்துகள் முற்றிலும் தவறானவை என்றும் இங்கு 06

---

## இந்திய - இலங்கை ஒத்துழைப்பின்படி தொடர்ந்து ஆதரவளிக்க இந்தியா உறுதி

### பிரதமருடனான சந்திப்பில் இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு



இலங்கையின் நலனுக்காக நாட்டின் தலைவர்களின் வழிகாட்டலின்படி இலங்கை மக்களுடன் இணைந்து செயற்படுவதும், இரு நாடுகளின் தலைவர்களும் ஒப்புக்கொண்ட இந்திய இலங்கை ஒத்துழைப்பின் தொலைநோக்குப் பார்வை மற்றும் அதன் 14 அம்ச 06

---



03

அரச பகுப்பாய்வாளர் திணைக்களம்

### தாமதமான அறிக்கைகள் யாவும் 06 மாதங்களுக்குள் வழங்கப்படும்

---

## யாழ். சிறுமி கில்மிஷாவுக்கு வெங்கடேஷ்வரன் வாழ்த்து



தென்னிந்திய தொலைக்காட்சி Zee தமிழ் தொலைக்காட்சி சரிகமபா இசை நிகழ்ச்சியில் பங்குபற்றி வெற்றியீட்டிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 14 வயதுடைய உதயசீலன் கில்மிஷாவுக்கு இலங்கைக்கான இந்திய துணை உயர்ஸ்தானிகர் கலாநிதி டி.வெங்கடேஷ்வரன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

கலாநிதி டி.வெங்கடேஷ்வரனினுடைய அழைப்பின் பேரில் தனது குடும்பத்தினருடன் கில்மிஷா, இந்திய துணை உயர்ஸ்தானிகராலயத்துக்கு 06

---

யாழ். நகரில் டெங்கு நோய் ஒழிப்பு

## வெளி மாவட்டங்களிலிருந்தும் PHI மாரை அழைக்க தீர்மானம்

*யாழ். விசேட, கரவெட்டி தினகரன் நிருபர்கள்*



டெங்குநோய் நிலைமையை கட்டுப்படுத்த மேலதிகமாக வெளி மாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை வரவழைக்கவுள்ளதாக, வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருமான Dr. த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் டெங்குநோய் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்ட போதே, அவர் இதனைத் தெரிவித்தார். 06

---



தே.மு.தி.க. தலைவர், புரட்சிக் கலைஞர் கேப்டன் விஜயகாந்தின் உடலுக்கு கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான செந்தில் தொண்டமான் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். கேப்டன் விஜயகாந்தின் இழப்பால் வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

---

உணவு, காய்கறிகள், பழங்கள் உட்பட

## சுமார் 90 வகை பொருட்களுக்கு VAT வரியிலிருந்து விலக்களிப்பு


**ஜனாதிபதி அலுவலக அரச வருமானப் பிரிவின் பணிப்பாளர் கே.கே.ஐ. எரந்த**

கல்வி சேவைகள், மின்சாரம், சுகாதாரம், மருத்துவம், பயணிகள் போக்குவரத்து, மற்றும் உணவு, அனைத்து காய்கறிகள், பழங்கள் உட்பட சுமார் 90 வகையான பொருட்களுக்கு VAT வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அலுவலக அரச வருமானப் பிரிவின் பணிப்பாளர் கே.கே.ஐ.எரந்த தெரிவித்தார். நெத்தலிக் கருவாடு, பெரிய வெங்காயம், கருவாடு போன்ற 06

---

'யுக்திய' விசேட சுற்றிவளைப்பு

## 48 மணி நேரத்துக்குள் 1,467 நபர்கள் கைது



'யுக்திய' விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் கீழ் நேற்று முன்தினம் (28) காலை முதல் நேற்று (29) அதிகாலை 3.00 மணிவரை மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 1,467 சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து 460 கிராம் ஹெரோயின், 653 கிராம் ஐஸ் போதைப்பொருள், 03 கிலோ 637 கிராம் கஞ்சா, 103,793 கஞ்சாச்செடிகள், 342 கிராம் 06

---

## கிளிநொச்சி நகரில் இன்று 'மலையகம் 200' நிகழ்வு

### அசானி, கில்மிஷாவுக்கும் பாராட்டு

*முல்லைத்தீவு குறூப் நிருபர்*




மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் பூர்த்தியடைந்ததை நினைவுகூரும் வகையில் 'மலையகம் 200' நிகழ்வு, கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் இன்று (30) முற்பகல் 06

---

## இந்திய பெருங்கடலில் 04 நிலநடுக்கங்கள் பதிவு

### இலங்கைக்கு பாதிப்பு இல்லை



மாலைதீவுக்கு அருகில் இந்தியப் பெருங்கடலில் நேற்று (29) காலை 04 சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் உணரப்பட்டன. ஆயினும், இதனால் இலங்கைக்கு எந்தப் பாதிப்பு இல்லையென, 06

---

இராஜாங்க அமைச்சர்

## சனத் நிஷாந்தவின் ஜீப் வாகனம் மீது தாக்குதல்



புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பயணித்த ஜீப் மற்றுமொரு காருடன் மோதி விபத்துக்குள்ளானதையடுத்து, வாகனத்தில் பயணித்தவர்கள் அமைச்சரின் வாகனத்தை தாக்கிச் சேதப்படுத்தியுள்ளதாக பொலிஸார் 06

---

இரத்தினபுரி வம்பட்டுவத்தயில்

## இளம் தாயினதும் 02 வயது மகனினதும் சடலங்கள் மீட்பு

*இரத்தினபுரி சுழற்சி நிருபர்*



இரத்தினபுரியின் கெஹேல்ஓவிட்டிகம வம்பட்டுவத்த பிரதேசத்திலுள்ள தொழிலாளர் குடியிருப்பு அறையொன்றிலிருந்து இரண்டு சடலங்கள் நேற்று முன்தினம் (28) இரவு பொலிஸாரால் மீட்கப்பட்டன. 06

# 2023 ஆம் ஆண்டு 560 மில்லியன் உட்கட்டமைப்பு வேலைத்திட்டங்கள் பூர்த்தி

## மனிதவள அபிவிருத்தி நிதிய தலைவர் பாரத் அருள்சாமி

(ஹற்றன் சுழற்சி நிருபர்)



மலையக மக்களின் வாழ்வில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பல செயற்றிட்டங்களை அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் முன்னெடுத்து வருவதாக அந்நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

அண்மையில் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்திற்கும் பெருந்தோட்ட தேசிய கல்வியல் நிலையத்திற்கும் இடையிலான சந்திப்பு நிதியத்தின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பில் நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி, பணிப்பாளர் நாயகம் லால் பெரேரா மற்றும் பணிப்பாளர்களும் கல்வியகத்தின் தலைவர் புஷ்பிக்க சமரக்கோன், பிரதம நிறைவேற்று அதிகாரி பிரசாத் தர்மசேன மற்றும் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

பெருந்தோட்ட தொழில்துறையில் ஆரம்ப காலங்களில் ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் காணப்பட்ட போதிலும். தற்போது வெறும் 1,00,000 தொழிலாளர்களே காணப்படுகின்றனர்.

இதற்கான பிரதான காரணமாகத் தொழில் துறையில் காணப்படும் வேதன குறைவு, வசதி வாய்ப்புக்களின் தட்டுப்பாடு மற்றும் நவீனமடைந்து வரும் வேலைவாய்ப்புக்கு ஏற்ற தொழில்துறை மாற்றமடையாமை என்பனவாகும். தொழில் துறையில் இளம் தலைமுறையினர் கொண்டுள்ள புரிதல் மற்றும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கண்ணியம் போன்றவை பாதிக்கப்பட்டுள்ளமையால் ஏறக்குறைய கடந்த இரண்டு வருடங்களில் தொழிலாளர்களின் அளவு 60 வீதத்தால் குறைவடைந்துள்ளது.

அமைச்சர் ஜீவன் தொண்டமான் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சராக பதவியேற்றவுடன் தொழிலாளர்களையும் மலையகத்தில் வாழும் அனைத்து மக்களையும் மேம்படுத்துவதற்காக பல முன்னேற்றகரமான திட்டங்களை முன்கொண்டு செல்கின்றார். அதனை அமுல்படுத்தும் ஒரு முக்கிய அலகாக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் இன்னும் பல முன்னேற்றகரமான சேவைகளை மக்களுக்கு தொடர்ந்து வழங்கும். 2023 ஆம் ஆண்டில் 560 மில்லியனுக்கும் அதிகமான உட்கட்டமைப்பு வசதி வேலைத்திட்டங்களை மேற்கொண்டுளோம்.

மேலும் 2015ஆம் ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான காலப்பகுதிகளில் கைவிடப்பட்ட அனைத்து வீட்டுத்திட்டங்களையும் சீர்செய்து மக்களின் பாவனைக்காக கையளிக்கவுள்ளோம். அந்தவகையில் இவ்வாண்டு 426 வீடுகளின் உட்கட்டமைப்பு வசதிகளை நாம் கட்டமைத்து வருகிறோம்.

மேலும் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் புதிய வாழ்வு வீடமைப்பு திட்டத்தில் 138 வீடுகளை பொருளாதார சவாலான காலப்பகுதியிலும் நிறைவு செய்துள்ளோம். அதில் 30 வீடுகள் நானுஓயா கிளேரெண்டனில் மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளன. தடைபட்டிருந்த இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ள 10,000 வீடமைப்பு திட்டத்தை ஆரம்பிப்பதற்கான அனைத்து வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வருகிறோம்.

கொரோனா நோய்த்தொற்று மற்றும் பொருளாதார சவால்களையும் தாண்டி நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் இருபத்தையாயிரத்துக்கும் அதிகமான மக்கள் பயனடையும் வகையில் 882 மில்லியனுக்கும் அதிகமான நிதி ஒதுக்கீட்டில் மக்களுக்கான குடிநீர் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. மேலும் நுவரெலியா, கண்டி, இரத்தினபுரி மற்றும் பதுளை மாவட்டங்களில் 18 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பயனடையும் விதத்தில் 1752 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் குடிநீர் திட்டங்கள் தற்சமயம் அமைக்கப்பட்டு வருகின்றன. அதுமாத்திரமன்றி 50 மில்லியனுக்கும் அதிகமான செலவில் பாடசாலை மற்றும் பெருந்தோட்டப்பகுதிகளில் மலசலக்கூட வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாக நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

## மலைச்சாரல்



அரநாயக்க திப்பிட்டிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் மூன்றாவது வெளியீடான எட்டாச் சிகரம் சஞ்சிகை வெளியீடு அதிபர் ரம்ஸான் நளீமினின் தலைமையில் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் ,முக்கிய பிரமுகர்களின் ஆக்கங்கள் இதில் உள்ளடங்கப்பட்டுள்ளன. இந்நிகழ்வில் மாவனல்லை கல்வி வலயப் பணிப்பாளர் எம். ஏ.பிரியங்கா பிரியதர்சினி பிரதம அதிதியாகவும்,சமூக சேவையாளர் யஸீர் அராபத் கௌரவ அதிதியாகவும்,வலய கல்வி அதிகாரி பி.டபிள்யூ டி.யூ. பிடவலகே விசேட அதிதியாகவும் கலந்துகொண்டனர். மேலும் இந்நிகழ்வில் வைத்தியர்கள்,நலன் விரும்பிகள்,பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள்,பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள்,பழைய மாணவியர் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர். நூல் அறிமுகத்தை சியம்பலாகஸ்கொடுவ மதீனா தேசிய பாடசாலை உப அதிபர் எம். ரலீன் மன்சூர் வழங்கினார். (படம்; அரநாயக்க செய்தியாளர்)

# உள்ளூராட்சி சபை செயற்பாடுகளை டிஜிட்டல் மயப்படுத்தல் திட்டம் ஆரம்பம்



உள்ளூராட்சி மன்ற சபைகளின் அலுவலக செயற்பாடுகளை டிஜிட்டல் மயப்படுத்துவதன் மூலம் பொது மக்களுக்கு துரிதமாக சிறந்த சேவைகளை பெற்றுக்கொள்ள முடியுமென மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.


அக்குறணை பிரதேச சபையின் அலுவலக செயற்பாடுகளை டிஜிட்டல் மயப்படுத்தும் நிகழ்வுகளில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திலக் ராஜபக் ஷ, முன்னாள் அக்குறணைப் பிரதேசசபை தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன், மத்திய மாகாண உள்ளூராட்சி மன்றத்தின் ஆணையாளர் உள்ளிட்ட பல உயர் அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

(இக்பால் அலி)

# வாகன போக்குவரத்துக்கு தடை

(ஹாலிஎல விசேட நிருபர்)



கடும் மழை காரணமாக பதுளை மஹியங்கனை வீதியின் 7ஆம் கட்டை பகுதியில் பிரதான வீதியில் பாரிய மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளதால் வாகன போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

பதுளை மஹியங்கனை வீதியிலுள்ள இவ்வாறான தடைகளை விரைவில் அகற்றுவதற்கு பதுளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

# கடும் மழை ; பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்ததால் போக்குவரத்து தடை

(மாத்தளை சுழற்சி நிருபர்)

மாத்தளை மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக இரத்தோட்ட வெரலுகஸ்தன்ன வித்தியாலய வளவில் பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்துள்ளது. இதனால் அருகிலுள்ள சில வீடுகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது. வெரலுகஸ்தன்ன பாதையின் குறுக்கே மரம் வீழ்ந்துள்ளமையால், இவ்வீதியின் வாகன போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது.

கடும் காற்று காரணமாக இரத்தோட்ட வெரலுகஸ்தன்ன வித்தியாலய வளவில் பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்துள்ளது. இதனால் அருகிலுள்ள சில வீடுகளும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனமொன்றும் பலத்த சேதமடைந்துள்ளன.

# மன்னாரில் டெங்கு பரவல் உச்சம்; டிசம்பர் மாதத்தில் மாத்திரம் 88 நோயாளிகள் அடையாளம்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன் தகவல்

(மன்னார் குறூப் நிருபர்)

மன்னாரில் கழிவகற்றல் செயன்முறை ஸ்தம்பிதமடைந்தமையால் டெங்கு அபாயம் அதிகரித்துள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் தற்போது டெங்கு நோய் தாக்கம் அதிகரித்துள்ளது. முழு இலங்கையும் எடுத்துக் கொண்டால் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் இந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தை பொறுத்தவரையில் கடந்த ஜனவரி முதல் நவம்பர் வரை 111 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



அதேவேளை டிசம்பர் மாதத்தில் மட்டும் இதுவரையில் 88 நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள். குறிப்பாக இந்த நோயாளர்களில் பலர் கொழும்பு, கண்டி மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளிலிருந்து அல்லது அந்த பகுதிகளுக்கு சென்று வந்தவர்களாக காணப்படுகின்றனர்.

ஆகவே இவர்கள் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நிலையில் இங்கு வரும்போது அவர்களை கடிக்கும் நுளம்புகள் தொற்றுதல் அடைந்து உள்ளூரிலும் இந்தநோய் வேகமாக பரவி வருகிறது.

குறிப்பாக விடத்தல் தீவு மற்றும் மன்னார் நகரத்தின் சில பகுதிகளிலும் பேசாலை பகுதிகளிலும் அதிகளவான டெங்கு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

டெங்கு நோயைப் பொறுத்தவரையில் சாதாரண டெங்கு காய்ச்சல் ,குருதி பெருக்குடனான டெங்குகாய்ச்சல் என இருவகையான டெங்கு காய்ச்சல்கள் உருவாகலாம்.

டெங்கு காய்ச்சல் ஒரு நோயாளருக்கு உருவாக போகிறது என்பது நோயாளியின் உடலில் உள்ள நீர்ப்பீடன தன்மை அதே போல டெங்கு வைரஸ் பிற பொருட்கள் ஆன்டிஜன் எனப்படும் பிற பொருட்கள் மற்றும் ஏனைய நீர்ப்பீட காரணிகள் தீர்மானிக்கின்றது.

எது எவ்வாறாக இருக்கின்ற போதும் டெங்கு காய்ச்சலின் ஆரம்ப அறிகுறிகளாக நெற்றி பொட்டை அண்டிய தலையடி, கண்ணின் பின்புறம் நோவு, சிலருக்கு தொண்டை நோவு,தசை நோவு சிலருக்கு வயிற்றில் நோவு போன்ற அறிகுறிகள் காணப்படும்.

இவர்கள் குருதி கசிவு என்ற நிலைக்கு உள்ளாகின்ற போது அபாயகரமான கட்டத்தை அடைகின்றனர்.

இந்த கசிவு நிலை ஏற்படுகின்ற போது உடலில் அதிர்ச்சி நிலை ஏற்படும். இந்த அதிர்ச்சி நிலைமை காரணமாக உடலினுடைய குருதி அமுக்கம் குறையும், மூளை, இருதயம் போன்றவற்றுக்கு செல்கின்ற குருதியின் அளவு குறையும். இது சிலவேளை மரணத்தை ஏற்படுத்தும்.

டெங்கு குருதி பெருக்குடன் காய்ச்சல் நோயாளிகள் கட்டாயமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற வேண்டும்.

அவர்களுடைய குருதியின் சிறு தட்டுக்கள் எண்ணிக்கை குறைவடையும். ஆனால் குருதி சிறு தட்டுக்கள் உடைய எண்ணிக்கை ஒரு இலட்சத்தையும் விட குறைவடைவதற்கு முன்னதாக சிலருக்கு கசிவு நிலை ஏற்படலாம்.

ஆகவே சில அறிகுறிகளை அடிப்படையாகக் கொண்டு உடலில் அதிகளவு களைப்பு, வயிற்றில் நோவு, தொடர்ந்து வாந்தி இப்படியான அறிகுறிகள் இருப்பின் அவர்கள் கட்டாயமாக வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டுமென அவர் தெரிவித்தார்.

## வடக்கின் உதயம்

# புதுக்குடியிருப்பில் கசிப்பு உற்பத்தி நிலையங்கள் முற்றுகை ஒருவர் கைது

(ஓமந்தை விசேட நிருபர்)



புதுக்குடியிருப்பு இடைக்கட்டு பகுதியில் நேற்று சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையங்கள் இரண்டு சுற்றிவளைக்கப்பட்டுள்ளன.

இதன்போது கசிப்பு உற்பத்திக்கு பயன்படும் 810 லீற்றர் கோடாவுடன் சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 3 மணியளவில் கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இடைக்கட்டு பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையமொன்று இயங்கிவருவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹெரத் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இச்சுற்றிவளைப்புகளில் ஈடுபட்டனர்.

சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் 14 பரல், 810 லீற்றர் கோடா, 60 லீற்றர் கசிப்பு என்பன மீட்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# வெள்ளநீருக்குள் இருந்து ஆணின் சடலம் மீட்பு

(தலைமன்னார் விசேட நிருபர்)

தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் தனது வீட்டைச் சுற்றியுள்ள வெள்ளநீருக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வேரி என்ற கிராமத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

நண்பர் ஒருவர் சம்பவத்தன்று இவரை தேடிச் சென்றபோதே வெள்ளநீருக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவருக்கு வலிப்பு நோய் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவரின் உடலை மன்னார் பொது வவத்தியசாலையில் பிரேதபரிசோதனைக்காக வைத்துள்ளனர்.

அத்துடன் தலைமன்னார் பொலிஸார் மரணம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அவசர தேவைகளுக்கு இரணைமடு வாய்க்காலிலிருந்து நீரைப் பெறலாம்

முல்லைத்தீவு குறூப் நிருபர்

இரணைமடு வாய்க்கால் வழியாக கிளிநொச்சி குளத்திற்கு நீர் கொண்டு வரப்படும் வான் பகுதியிலிருந்து அவசர தேவைகளுக்கு குடிநீரினை பெற்றுக் கொள்ள முடியும் என இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளனம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி குளம் மாசடைந்துவருகின்றது. ஆனால் நீர் சுத்திகரிப்புக்கான போதிய வளங்கள் இல்லாத பிரச்சினை காணப்படுகின்றது.

கிளிநொச்சி குளத்திற்கு இரணைமடுக் குளத்திலிருந்தும் கனகாம்பிகைக்குளத்தின் வான் பாயும் நீரும் வருகிறது. இதனுடன் இணைந்த கழிவுநீர் வாய்க்கால் மூலமும் வருகின்றது. கனகாம்பிகைக்குளத்தின் கழிவு வாய்க்காலின் மூலம் வரும் நீர் மாசடைந்து காணப்படுகின்றது. கிளிநொச்சி வைத்தியசாலை கழிவு நீர் கலக்கும் சந்தர்ப்பம் அதிகம் உள்ளது. குடியிருப்புக்களின் கழிவுகளும் கலக்கின்றது. நகரத்தில் உள்ள , வர்த்தக நிலையங்கள், விடுதிகள் என்பவற்றின் கழிவுகள் கலக்கின்றன. இரணைமடு வாய்க்கால்களில் கனரக வாகனங்கள், விலங்குகள் என்பவற்றை கழுவுவதன் மூலமும் எண்ணை கசிவுகள் கலப்பதாகவும் தெரிவிக்கப்பட்டன.

இதை தடுக்க பல வழிமுறைகள் உண்டு. நகரப்பகுதியிலிருந்து வரும் கழிவு நீரை தனி வாய்க்கால் மூலம் குளத்திற்கு செல்லாமல் வெளி வாய்க்கால் பகுதியில் விடலாம். குடிமனை கழிவு நீர் பற்றிய விழிப்புணர்வு கருத்தமர்வுகள் வைத்து தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கி புதிய நவீன கட்டமைப்பு முறைகளை நடைமுறைப்படுத்தலாம். மருத்துமனையில் உரிய வகையில் உத்தரவாதங்களை பெறலாம். தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். மீறுவோர் மீது சட்ட நடவடிக்கைக்கு செல்லலாம். கிளிநொச்சி குளத்தை ஆழப்படுத்தி மீன்குஞ்சுகளை வளர்த்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

# புதுக்குடியிருப்பில் 25 இலட்சம் அதிஷ்டம்

(ஓமந்தை விசேட நிருபர்)

தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் லொத்தர் சீட்டின் மூலம் 25 இலட்சம் ரூபா அதிஷ்டம் கிடைத்துள்ளது. கிளிநொச்சியைச் சேர்ந்த நபரொருவருகே லொத்தர் சீட்டிலின் மூலம் 25 இலட்சம் ரூபா பணம் கிடைத்துள்ளது. அவருக்கான காசோலை நேற்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி,தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் பணிப்பாளர், அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அதிஷ்டம் வென்ற நபருக்கான 25 இலட்சம் ரூபா காசோலை இதன்போது வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 டிசம்பர் 30 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.59
லுஹர் - 12.14
அஸர் - 03.35
மஃரிப் - 06.04
இஷா - 07.19

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் மார்கழி 14
ராகுகாலம் : பகல் : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



இறக்குமதி விதை உருளைக்கிழங்கில்

# பக்டீரியா தொற்று ஏற்பட்டமை விசாரணை நடத்தப்பட வேண்டும்



விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கு விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டுமென வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களான அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா, ஆளுநர் திருமதி பி.எஸ். எம்.சார்ள்ஸ், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் ஆகியோரின் தலைமையில் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் (28) மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்ட விவசாயிகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்குகளில் பக்டீரியா தொற்று ஏற்பட்டமை தொடர்பாக விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் வடமாகாண பிரதி பணிப்பாளரிடம் ஆளுநர் கேள்விகளை முன்வைத்தார்.

எவ்வித தரச் சான்றிதழுமின்றி குப்பிளான் களஞ்சியசாலைக்கு விதை உருளைக்கிழங்குகள் எவ்வாறு கொண்டு வரப்பட்டன?, இதற்கான அனுமதியை வழங்கியது யார்?, தற்போது அவற்றை அழிப்பதற்குரிய செலவு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான மாற்றுச் செயற்பாடுகள் போன்ற பல விடயங்கள் தொடர்பாக ஆளுநர் கேள்விகளை முன்வைத்தார்.

இந்நிலையில், விதை உருளைக்கிழங்கு இறக்குமதியில் மோசடிகள் இடம்பெற்றிருக்கக் கூடுமென்று சந்தேகிப்பதால், இது தொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் ஆளுநர் வலியுறுத்தினார்.

ஆளுநரின் இந்த தீர்மானத்துக்கு அமைச்சர் டக்ளஸ் தேவனந்தாவும் இணக்கம் தெரிவித்தார்.

நாட்டில் கொவிட் 19 தொற்று பரவல் குறித்து

# பொதுமக்கள் பாதுகாப்புடன், மிகுந்த அக்கறையுடன் இருப்பது அவசியம்



கொவிட் 19 தொற்று பரவல் தொடர்பில் அரசாங்கத்தின் கருத்து எதுவாக இருந்தாலும், மக்கள் தமது பாதுகாப்பு தொடர்பில் மிகுந்த அக்கறையுடன் இருக்க வேண்டுமென பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன கூறுகையில், உலகளவில் கொவிட்19 தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை மற்றும் தனிநபர் இறப்புகள் மீண்டும் அதிகரித்துள்ளன. புதிய கொவிட்19 திரிபு இலங்கைக்குள் பிரவேசித்துள்ளதை விசேட நிபுணர்களுடன், சுகாதாரத் திணைக்களங்களும் உறுதிப்படுத்தியுள்ளன.

இது தொடர்பில் அண்டை நாடான இந்தியா அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்தியாவில் தொற்றுநோய் பரவல் அதிகரித்துள்ளது. புதிய கொவிட் 19 திரிபு குறித்து அடிமட்டத்தில் எந்தவொரு ஆராய்வும் செய்யப்படவில்லை. இருப்பினும், இந்த நாட்களில், சுவாசக் கோளாறுகள் உள்ள நோயாளிகள் அதிகரித்துள்ளனர்.

கொவிட் 19 தொற்று உள்ளவர்கள் என சந்தேகிக்கக்கூடிய பல நோயாளிகள் நாட்டில் காணப்படுகின்றனர். அதனால் புதிய திரிபு ஓரளவுக்கு நாட்டில் பரவி வருகிறது என்பது தெளிவாகிறது. ஆகவே, எந்த ஒரு நபரும் ஆபத்தில்லை என்று சொல்ல முடியாது.

இந்த விவகாரம் குறித்து அரசு தரப்பில் முறையான விசாரணை நடத்த வேண்டும். பின்னர் இது குறித்து சுகாதாரத்துறைக்கு தகவல் தெரிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எவ்வாறாயினும், பொது மக்களும் இவ்விடயத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றுவதும் இந்த நேரத்தில் அவசியம். விமான நிலையத்தில் தனிமைப்படுத்தல் தொடர்பான எந்த செயல்முறையும் இல்லை. அதனால் நாட்டுக்குள் தொற்றுநோய்கள் நுழைய வாய்ப்பு உள்ளது. எனவே அனைவரும் இது குறித்து கவனமாக இருக்க வேண்டும்." என்றும் உபுல் ரோஹன வலியுறுத்தினார்.

அரச பகுப்பாய்வாளர் திணைக்களம்

# தாமதமான அறிக்கைகள் யாவும் 06 மாதங்களுக்குள் வழங்கப்படும்



அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் தாமதமான அறிக்கைகள் ஆறு மாதங்களுக்குள் வழங்கப்படுமென நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொரோனா தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக தொற்றுநோய் சோதனைக்கு தேவையான இரசாயனங்களை இறக்குமதி செய்வதில் ஏற்பட்ட சிரமங்களால் இந்த தாமதம் ஏற்பட்டதாக அவர் கூறினார்.

தொற்றுநோயைத் தொடர்ந்து இரசாயனத்தின் விலை கடுமையாக உயர்ந்ததால், சோதனை நடத்துவதற்கு சுமார் 20,000 ரூபா செலவாகியதாக அமைச்சர் அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ கூறினார்.

தாமதமாகிவரும் சோதனைகளை அடுத்த 06 மாதங்களுக்குள் முடிக்க வேலைத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்றும் அதன் பின்னர் குறிப்பிட்ட மாதத்துக்குள் சோதனைகள் முடிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.



பாகிஸ்தானின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாறூக் புர்கி பதவிக்காலம் நிறைவடைந்து பாகிஸ்தானுக்கு செல்லவுள்ளார். இந்நிலையில், கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்துக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்பு செயலாளரும் கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஸ்தாபருமான ரஹ்மத் மன்சூர் சென்று அவருக்கு நன்றி, வாழ்த்து தெரிவித்தார். இதன் போது உயர்ஸ்தானிகருக்கு நினைவுச்சின்னமும் அவர் வழங்கி கௌரவித்தார்.

இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானால்

# மன்னாரில் 120 பயனாளிகளுக்கான வாழ்வாதாரத் திட்டம் முன்னெடுப்பு



மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 120 பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மன்னார் நகர பிரதேச பிரிவில் 32 பயனாளிகளில் 7 பயனாளிகளுக்கு முதற்கட்டமாக ஆடுகளை கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் நேற்று வழங்கி வைத்தார்.

மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் அலுவலகத்தில் வைத்து பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கப்பட்டன.

பின்தங்கிய கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பயனாளிகள் மத்தியில் விவசாய அமைச்சால் ஆடு வளர்ப்பு திட்டம் மன்னாரில் 5 பிரதேச செயலகங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. சுமார் 75,000 ரூபா பெறுமதியான ஆடு, 3 ஆடுகள்படி பயனாளி ஒருவருக்கு வழங்கப்படுகின்றது.

இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கனகேஸ்வரன், மன்னார் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் , கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர், பயனாளிகளாகிய பலரும் கலந்துகொண்டனர்.

# ஏழை எளிய மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்த கேப்டன்

ஐ.ம.ச. வடகொழும்பு பிரதான அமைப்பாளர் ராம் இரங்கல்



தென்னிந்திய முன்னணி திரைப்பட நடிகரும் தே.மு.தி.க. நிறுவனருமான கேப்டன் விஜயகாந்தின் மறைவு தமிழ் மக்களுக்கும் திரையுலகுக்கும் பேரிழப்பாகுமென, ஐக்கிய மக்கள் சக்தியின் வடகொழும்பு பிரதான அமைப்பாளரும் ராம் நற்பணி மன்றத்தின் தலைவருமான கலாநிதி சீ.வை.பி.ராம் தெரிவித்தார்.

நடிகர் விஜயகாந்தின் மறைவையொட்டி அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்ததாவது,

"நடிகர் விஜயகாந் சுகயீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட செய்தி கேள்விப்பட்ட போது, அவர் விரைவில் குணமடைந்து வீடு திரும்புவார் என்றே நினைத்திருந்தோம். என்றாலும் மரணம் அவரையும் விடவில்லை. அவர் எப்போதும் ஏழை எளிய மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்து செயற்பட்டு வந்தார்.

இலங்கையிலிருந்து தமிழ் மக்கள் அகதிகளாக சென்ற போது, எமது மக்களின் நலனுக்காக பாடுபட்டதுடன், சட்ட மன்றத்திலும் குரல் கொடுத்தார். அவர் எப்போதும் கஷ்டப்படும் மக்களின் நலத்திட்டங்களுக்காக முன்னின்று செயற்பட்டதால் குறுகிய காலத்தில் அரசியலிலும் பிரபல்யமடைந்தார். அதனாலேயே அவர் சட்ட மன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராகவும் உயர்வடைய முடிந்தது. எனவே அவரின் இழப்பால் வாடும் மனைவி, பிள்ளைகள், கட்சி தொண்டர்கள், ரசிகர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்" என்றார்.

நுவரெலியா மாநகர சபையின்

# முன்னாள் பிரதி முதல்வர் எல்.நேருஜி காலமானார்

இராதாகிருஸ்ணன் MP இரங்கல்





நுவரெலியா மாநகர சபையின் நீண்டகால உறுப்பினரும் முன்னாள் பிரதி முதல்வருமான எல்.நேருஜி சுகயீனம் காரணமாக நேற்று கொழும்பில் காலமானார்.

இவர் நுவரெலியா மாநகர சபைக்கு நியமன உறுப்பினராக 1988ஆம் ஆண்டு அன்றைய ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சராக இருந்த காமினி திசாநாயக்கவால் நுவரெலியா மாநகர சபைக்கு நியமன உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

இலங்கை கால்பந்தாட்ட சங்கத்தின் உப தலைவராகவும் நுவரெலியா கால்பந்தாட்ட சங்கத்தின் நீண்டகால தலைவர் மற்றும் செயலாளராகவும் இருந்து பெரும் சேவையாற்றியிருந்தார்.

இவரது மறைவையிட்டு நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தனது அனுதாபத்தை வெளியிட்டுள்ளார்.

வேலுசாமி இராதாகிருஸ்ணன் எம்.பி. தனது அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"தனது உயிருக்கும் மேலாக கால்பந்தாட்ட விளையாட்டை நேசித்தவர் மறைந்த அமரர் நேருஜி. இலங்கை கால்பந்தாட்ட சங்கத்தின் உப தலைவராகவும் நுவரெலியா கால்பந்தாட்ட சங்கத்தின் நீண்டகால தலைவர் மற்றும் செயலாளராக இருந்து பெரும் சேவையாற்றியிருந்தார்.

இவருடைய உலகமே நுவரெலியா கால்பந்தாட்டத்தை முன்னேற்றுவதிலேயே இருந்தது. இவருடைய இழப்பு என்றும் ஈடுசெய்ய முடியாது.

நுவரெலியாவில் இன்று இளைஞர்கள் கால்பந்தாட்ட விளையாட்டில் ஆர்வம் காட்டி வருகின்றார்களாயின், அதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் நேருஜி. அவர் யாரிடம் சென்று என்ன உதவி கேட்டாலும் அது கால்பந்தாட்ட விளையாட்டுக்கு மாத்திரமே" என்றார்.

# இமாலயப் பிரகடனம்; இணையவழி கூட்டம்

இமாலயப் பிரகடனம் தொடர்பாக விளக்கமளிப்பதற்காக 'உலகத் தமிழர் பேரவை' அமைப்பின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் இணையவழியிலான பொதுக்கூட்டத்தில் மீண்டும் கலந்துகொள்ளுகிறார்.

இப்பொதுக் கூட்டம் இன்று (30) ரொறொன்ரோ நேரப்படி காலை10.00 மணிக்கு ஆரம்பமாகும். இலண்டன் நேரப்படி மாலை 3.00 மணியாகும். ஐரோப்பிய நேரப்படி மாலை 4.00 மணியாகும். இலங்கை நேரப்படி மாலை இரவு 8.30 மணியாகும். உங்கள் கேள்விகளை எழுத்து மூலம் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் முன்வைக்கலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மின் கட்டணம் பெப்ரவரியில் குறைப்பதற்கு அரசு உத்தேசம்

VAT வரி விதிப்பு தாக்கம் செலுத்தாது



மின் கட்டணத்தை எதிர்வரும் பெப்ரவரியில் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், (வற் )வரி மின் கட்டணத்தில் தாக்கம் செலுத்தாதெனவும், இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவர் மஞ்சுள பெர்ணான்டோ தெரிவித்தார்.

மின் கட்டண திருத்தம் தொடர்பாக வினவிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"மின் கட்டண திருத்தம் தொடர்பாக கடந்த 20ஆம் திகதி பேச்சுவார்த்தை நடத்தினோம். நீர் மின்னுற்பத்தி, நிலக்கரி மற்றும் எரிவாயுவுடனான மின்னுற்பத்தி, அதற்கான செலவு தொடர்பான தரவுகளை மின்சார சபையிடம் கோரியுள்ளோம். எதிர்வரும் ஜனவரி 15ஆம் திகதி சகல தரவுகளையும் வழங்குவதாக மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, மின் கட்டண திருத்தம் தொடர்பாக மின்சார சபை முன்வைக்கும் யோசனைகளை முன்னிலைப்படுத்தி, ஜனவரியின் இறுதி வாரத்தில் மின் கட்டணம் தொடர்பாக பொதுமக்களிடம் கருத்துக்கணிப்பு கோரவும் தீர்மானித்துள்ளோம்.

மின்சார சட்டத்துக்கமைய மின் கட்டண திருத்தம் தொடர்பான சகல நடவடிக்கைகளும் வெளிப்படையான முறையில் முன்னெடுக்கப்படும்" என்றார்.

# கொழும்பிலுள்ள பாதுகாப்பற்ற 200 மரங்களை வெட்ட முடிவு

கொழும்பு நகரில் அடையாளம் காணப்பட்டுள்ள 200 க்கும் மேற்பட்ட பாதுகாப்பற்ற மரங்களை வெட்டுவதற்கு திட்டமிட்டுள்ளதாக, கொழும்பு மாநகர ஆணையாளர் ஜே.எம்.பத்ராணி ஜயவர்தன தெரிவித்தார்.

பேராதனை தாவரவியல் பூங்கா அதிகாரிகளும் மற்றும் நிபுணர்களும் இணைந்து ஆய்வை மேற்கொண்டதாகவும் இதன் அடிப்படையிலேயே சுமார் 200 மரங்களை வெட்டுவதற்கு அவர்கள் கோரியதாகவும், அவர் தெரிவித்தார். இந்நிலையில், கொழும்பு நகரில் பாதுகாப்பற்ற மரங்களை வெட்டுவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும், ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

வெலிகெபொல பிரதேச சபை

2024ம் ஆண்டு வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2024ம் ஆண்டுக்காக வெலிகெபொல பிரதேச சபைக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு வழங்குநர்கள் நிர்மாண விடயங்களுக்காக ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்யும் முகமாக வெலிகெபொல பிரதேச சபையின் செயலாளரால் 2023.12.31 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்களை வெலிகெபொல பிரதேச சபைக்கு வருகைதந்து அல்லது www.[illegible].gov.lk இணையதளத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
வெலிகெபொல பிரதேச சபை,
ஓப்பநாயக்க.

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் மார்கழி மாதம் 15ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷவ்வால் பிறை 13

## குறள் தரும் சிந்தனை



கரப்பவர்க்கு யாங்கொளிக்கும் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்

இருப்பதை ஒளித்துக்கொண்டு இல்லை என்பவர்களின் சொல்லைக் கேட்டவுடன், இரப்போரின் உயிரே போய் விடுகிறதே; அப்படிச் சொல்பவர்களின் உயிர் மட்டும் எங்கே ஒளிந்துகொண்டு இருக்குமோ?

# டெங்கு தொற்று தீவிரமடைவதால் அவதானம் பேணுவது அவசியம்!

இலங்கையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகின்றது. இந்த வருடத்தில், அதாவது இவ்வருட ஜனவரி மாதத்தில் இருந்து டிசம்பர் மாதத்தின் இறுதி வரையான 12 மாத காலப்பகுதியில் நாட்டில் டெங்கு தொற்றுக்கு இலக்கான சுமார் ஐம்பது பேர் உயிரிழந்துள்ளனர். ஆனால் டெங்கு தொற்றுக்கு உள்ளானோரில் ஏராளமானோர் சிகிச்சை பெற்று குணமடைந்த நிலையில் வீடு திரும்பியுள்ளனர்.

நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை சமீப நாட்களாக அதிகரித்து வருவதாக மருத்துவத்துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் டெங்கு தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். ஆனாலும் மேல்மாகாணத்திலேயே டெங்கு நோயாளர்கள் அதிகளவில் இனங்காணப்பட்டுள்ளனர். தற்போது மாத்திரமன்றி, முன்னைய காலத்திலும் மேல்மாகாணத்திலேயே டெங்கு தொற்றாளர்கள் அதிகளவில் இனங்காணப்படுவது வழக்கமாகும்.

டெங்கு நோய் நாட்டில் அதிகரித்து வருவதன் காரணமாக சுகாதாரப் பிரிவினரால் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டு வருகின்றனர். டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கு பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பு நல்க வேண்டும் எனவும் சுகாதாரத்துறை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

நாட்டில் மழைக்காலம் ஆரம்பமானால் நுளம்புகள் பல்கிப் பெருகுவது வழமையாகும். மழைநீர் தேங்கி நிற்கின்ற இடங்கள் நுளம்புகள் முட்டையிட்டுப் பெருகுவதற்கு வாய்ப்பான இடங்களாகும். எனவேதான் மழைக்காலம் ஆரம்பமானதும் நுளம்புகள் பல்கிப் பெருகுகின்றன. மழைக்காலத்தில் நுளம்புகள் பெருகுவதைக் கட்டுப்படுத்த முடியாதிருக்கிறது. பொதுமக்கள் தங்களது வீடு மற்றும் சுற்றுப்புறச் சூழல் தூய்மையில் கூடிய கவனம் செலுத்துவது மிகவும் அவசியமாகும். ஆனால் மக்கள் எவ்வளவுதான் கவனம் செலுத்தினாலும், நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவது இலகுவான காரியமல்ல.

மக்கள் இன்றைய காலத்தில் தங்களது வெளியூர்ப் பயணங்களின் போது, தங்களது பாதுகாப்புத் தொடர்பில் அதிகம் கவனம் செலுத்துவதும் அவசியமாகின்றது.

எமது சூழலில் உலவுகின்ற நுளம்புகள் யாவும் டெங்கு வைரஸ் கிருமிகளைப் பரப்புகின்ற நுளம்புகள் அல்ல என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியம். ஆனாலும், அனைத்து நுளம்புகளையும் நாம் சாதாரண நுளம்புகள் என்றெண்ணி ஏமாந்து விடவும் கூடாது. பொதுவாக நுளம்புகள் என்றாலே அவை ஆபத்தானவை என்ற எச்சரிக்கையுணர்வு நம் அனைவருக்கும் முதலில் அவசியம்.

உலக நாடுகளில் 19 ஆம் நூற்றாண்டில் அதிகமாகப் பரவ ஆரம்பித்த டெங்கு, இன்று 100 இற்கும் மேற்பட்ட நாடுகளில் நிலவும் பிரதான சுகாதாரப் பிரச்சினையாக விஸ்வரூபமெடுத்து நிற்கிறது.

டெங்கு பாதிப்பு அதிகரித்து வருவதற்கு மக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வு இல்லாததே காரணம் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். டெங்கு காய்ச்சல் வரக் காரணம் என்ன? அது எப்படி மற்றவருக்குப் பரவுகிறது? மற்றைய காய்ச்சல்களிலிருந்து எப்படி அதை வேறுபடுத்தி அறிவது? அதற்கான பரிசோதனைகள், சிகிச்சை முறைகள் எவை?

இவ்வாறான சந்தேகங்கள் தொடர்பாக மக்கள் போதிய விழிப்புணர்வையும் அறிவையும் கொண்டிருந்தால் டெங்கு நோய் ஆபத்திலிருந்து கூடியளவு பாதுகாப்புப் பெற முடியும் என்பது உண்மையாகும். ஆகவே டெங்கு நோய் தொடர்பான விடயங்களை ஊடகங்கள் வாயிலாக அறிந்து கொள்வதில் மக்கள் போதிய கவனம்செலுத்துவது அவசியம்.

தூயதண்ணீரில் பெருகக் கூடிய `ஏடிஸ் ஏஜிப்தி' (Aedes Aegypti) என்ற ஒரு வகை நுளம்புகள் மூலம் டெங்கு வைரஸ் பரவுகிறது. `ஏடிஸ்' நுளம்புகள் மூன்று வாரங்களுக்குமேல் உயிர்வாழக் கூடியனவாகும். டெங்கு நுளம்புகள் பெரும்பாலும் பகல் நேரங்களில் மட்டுமே மனிதரைக் குத்துகின்றன. உடல் மற்றும் கால்களில் கறுப்பு மற்றும் வெள்ளை நிறப் புள்ளிகள் கொண்ட உடலமைப்பை இந்நுளம்புகள் கொண்டுள்ளன.

வீட்டுச் சூழலில் சரியாக மூடப்படாத வெற்றுப் பாத்திரங்கள், தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்கள், தோண்டப்பட்ட குழிகள், மொட்டைமாடிகளில் வைத்திருக்கும் உபயோகமற்ற பொருட்கள், கண்டபடி கிடக்கும் பிளாஸ்டிக் கப்கள், பயனற்ற பொருள்கள், வீடுகளில் சரியாக மூடப்படாத தரைத் தொட்டிகள், மேல்நிலைத் தொட்டிகள், டயர்கள், பயன்படுத்தாத உடைந்த சிமெந்து தொட்டிகள், நீண்டகாலமாகக் கழுவப்படாத தொட்டிகள் போன்றவற்றில் தேங்கியிருக்கும் நல்ல தண்ணீரில் `ஏடிஸ்' நுளம்புகள் முட்டையிட்டுப் பெருகுகின்றன. இது டெங்கு பாதிப்புள்ளவர்களைக் குத்திவிட்டு மற்றவர்களைக் குத்தும்போது ஒருவரிடமிருந்து மற்றவருக்கு டெங்கு பரவுகிறது.

எமது சூழலில் உள்ள நுளம்புகளை முற்றாக ஒழிப்பதென்பது இயலாத காரியமாகும். ஆனால் நுளம்புகள் எம்மைக் குத்தாமல் பாதுகாத்துக் கொள்வது ஓரளவு இயலுகின்ற காரியம். எனவே ஒவ்வொருவரும் நுளம்புகளில் இருந்து பாதுகாப்புப் பெறுவதில் கவனம் செலுத்த வேண்டும்.

editor.tkn@lakehouse.lk

# தீவிர தமிழ்ப்பற்றும், பிறருக்கு உதவும் உள்ளமும் கொண்டவர் விஜயகாந்த்

## நலிவடைந்த மக்களுக்கு அவர் வழங்கிய உதவிகள் ஏராளம்!



தமிழ்நாடு மதுரை மாவட்டம், திருமங்கலத்தில் 1952 ஆம் ஆண்டு, ஒகஸ்ட் 25 ஆம் திகதி அழகர்சாமிஆண்டாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார் விஜயராஜ் என்கின்ற விஜயகாந்த். இவரின் மனைவி பிரேமலதா. இவர்களுக்கு விஜய பிரபாகரன், சண்முக பாண்டியன் என இரண்டு மகன்கள் இருக்கிறார்கள்.

சிறு வயது முதலே சினிமாமீது இருந்த பிடிப்பின் காரணமாக, பல பாடசாலைகள் மாறியும் அவரால் பத்தாம் வகுப்பு வரை மட்டுமே படிக்க முடிந்தது. அதே நேரம் தான் விரும்பிப் பார்க்கும் எம்.ஜி.ஆரின் படங்களை காட்சிகாட்சியாக தன் நண்பர்களிடம் விபரிக்கும் அளவுக்கு சினிமா மீது அவருக்கு ஆர்வம் இருந்தது. படிப்பை நிறுத்திய பிறகு கீரைத்துரையில் இருக்கும் தன் தந்தையின் அரிசி ஆலையில் பணிபுரிந்தார்.

தனது நண்பர்களின் உந்துதலின் பேரிலும், தனக்கிருந்த ஆர்வத்தாலும் சினிமாவில் நடிப்பது என முடிவுசெய்து சென்னைக்கு வந்தார். பல்வேறு அவமானங்கள், புறக்கணிப்புகளுக்கு மத்தியில், 1979 ஆம் ஆண்டு எம்.ஏ.காஜாவின் இயக்கத்தில் வெளியான `இனிக்கும் இளமை' படத்தில் நடித்து, தன் திரைப் பயணத்தைத் தொடங்கினார். விஜயராஜ் என்ற தன் பெயரை விஜயகாந்த் என மாற்றிக்கொண்டார்.

சட்டம் ஒரு இருட்டறை, தூரத்து இடி முழக்கம், அம்மன்கோவில் கிழக்காலே, உழவன் மகன், சிவப்பு மல்லி என வெற்றிப்படங்களைக் கொடுத்து தமிழின் முன்னணிக் கதாநாயகனாக வலம்வந்தார். 150 க்கும் மேற்பட்ட படங்களில் நடித்த விஜயகாந்த், 1984 இல் மட்டும் ஒரே ஆண்டில் 18 படங்களில் நடித்து சினிமாத்துறையில் வரலாற்றுச் சாதனை புரிந்தார்.

1999 ஆம் ஆண்டு நடிகர் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் விஜயகாந்த். பல ஆண்டுகளாக அடைக்க முடியாமல் இருந்த நடிகர் சங்கக் கடனை சிங்கப்பூர், மலேசியா என தமிழர்கள் அதிகம் வாழும் வெளிநாடுகளில் நட்சத்திரக் கலை விழாக்கள் நடத்தி வட்டியும் முதலுமாக அடைத்தார். மேலும், நலிவடைந்த கலைஞர்களுக்கு உதவி செய்வதற்காக ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகம் செய்து, பெரும் தொகையை வங்கியில் வைப்பிலிட்டார். 2002ம் ஆண்டு காவிரி நதிநீர் பிரச்னை உச்சத்தில் இருந்தபோது, அனைத்து நடிகர்களையும் ஒன்றிணைத்து 'நீர் தராத கர்நாடாகாவுக்கு மின்சாரம் இல்லை!' என்கின்ற முழக்கத்துடன் மாபெரும் போராட்டத்தை நெய்வேலியில் நடத்தினார்.

1965 ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தனது சிறு வயதிலேயே விஜயகாந்த் பங்கேற்றதாகச் சொல்லப்படுகிறது. அதேபோல, 1984 ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர்கள் நலனுக்காக சக நடிகர், நடிகைகளுடன் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் நடத்தி, தமிழக ஆளுநரிடம் மனு அளித்தார். பின், 1986ம் ஆண்டு அதே காரணங்களுக்காக சென்னை வட்டாட்சியர் அலுவலகத்தில் உண்ணாவிரதம் இருந்தார் விஜயகாந்த். அவரின் ரசிகர் மன்றத்தின் சார்பாக தமிழ்நாடு முழுவதுமுள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகத்தின் முன்பும் இலங்கைத் தமிழர்களுக்காக உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது.

1989களில் மண்டபம் உள்ளிட்ட முகாம்களில் அகதிகளாக வசிக்கும் இலங்கையர்களுக்கு உதவிபுரிந்தும் வந்தார். "ஈழத்தமிழர்கள் அழும்போது, என்னால் கொண்டாட்டத்தில் இருக்க முடியாது" என்று கூறி தனது பிறந்தநாள் கொண்டாட்டைத் தவிர்த்தார்.

2002 இல் `ராஜ்ஜியம்' படத்திலிருந்து அரசியல் குறித்த வசனங்கள் அவரின் படங்களில் பட்டாசாக வெடிக்கத் தொடங்கின. அப்படி, விஜயகாந்தின் இந்த அரசியல் நகர்வுகளைப் புரிந்துகொண்டதாலேயே ஆளும் அரசியல் கட்சிகள் அவருக்குப் பல நெருக்கடிகளைக் கொடுத்துவந்தன. அதேவேளையில், அரசியலுக்கு வர, சரியான களத்துக்காக, காரணத்துக்காகக் காத்துக்கொண்டிருந்தார் விஜயகாந்த். கள்ளக்குறிச்சியில் தன் ரசிகர் மன்ற நிர்வாகி ஒருவரின் திருமண விழாவில் விஜயகாந்த் வருகையை முன்னிட்டு கட்டப்பட்ட மன்றக் கொடிக் கம்பங்களை பா.ம.கவினர் வெட்டிச் சாய்த்தனர்.

அதைத் தொடர்ந்து, நடந்த திருமண நிகழ்வில் ராமதாஸையும், அவரின் மகன் அன்புமணி ராமதாஸையும் விஜயகாந்த் விமர்சிக்க, பதிலுக்கு விஜயகாந்தை ராமதாஸ் விமர்சிக்க, ராமதாஸ் விஜயகாந்த் மோதல், பா.ம.க தொண்டர்கள் – விஜயகாந்த் ரசிகர்கள் என விரிவடையத் தொடங்கியது. பல இடங்களில் விஜயகாந்தின் மன்றக்கொடிகள் வெட்டிச் சாய்க்கப்பட, மன்ற நிர்வாகிகள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். விஜயகாந்த் நடித்த `கஜேந்திரா' படத்துக்கு ராமதாஸால் சிக்கல் எழுந்தது. விஜயகாந்தைக் கடுமையாக விமர்சித்து வட மாவட்டங்களில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டன.

கண்கள் சிவக்க வெகுண்டெழுந்தார் நடிகர் விஜயகாந்த். ஊர் ஊராகச் சென்று தன் ரசிகர் மன்ற நிர்வாகிகளைச் சந்திக்க ஆரம்பித்தார். சென்ற இடங்களிலெல்லாம் விஜயகாந்துக்கு பலத்த வரவேற்பு கிடைத்தது. விஜயகாந்தைக் காண மக்கள் கூட்டம் அலைமோதியது. இந்த



நிலையில், 2005ம் ஆண்டு, செப்டம்பர் 14ம் திகதி மிகப்பெரிய மாநாட்டை மதுரையில் நடத்தி, 'தேசிய முற்போக்கு திராவிட கழகம்' எனும் அரசியல் கட்சியைத் தொடங்கினார் விஜயகாந்த்.

கட்சி ஆரம்பித்து ஓராண்டு நிறைவடையாத நிலையில், 2006ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், தனித்துப் போட்டி என்று கூறி 232 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தியவர், பா.ம.கவின் கோட்டையான விருத்தாசலம் தொகுதியில் அமோக வெற்றிபெற்றார். மற்ற வேட்பாளர்கள் தோல்வியடைந்தாலும் கணிசமான வாக்குகளைப் பெற்று, தே.மு.தி.கவுக்கு 8.4 சதவிகித வாக்குகளைப் பெற்றுத்தந்தனர். அதைத் தொடர்ந்து, 2009ல் நடைபெற்ற மக்களவைத் தேர்தலிலும் தனித்து நின்று, தோல்வியைத் தழுவினாலும் 10 சதவிகித வாக்குகளை தே.மு.தி.க பெற்ற

தனித்தே போட்டியிட்டுவந்த விஜயகாந்த், முதன்முறையாக 2011ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைத்து தேர்தலைச் சந்தித்தார். 41 இடங்களில் போட்டியிட்ட தே.மு.தி.க., 29 இடங்களில் வெற்றிபெற்று எதிர்க்கட்சி அந்தஸ்தைப் பெற்றது. ரிஷிவந்தியம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற விஜயகாந்த் முதன்முறையாக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரானார்.

2011ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் நடந்து முடிந்து நடைபெற்ற முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே விஜயகாந்துக்கும் ஜெயலலிதாவுக்கும் மோதல் ஏற்பட்டு, அ.தி.மு.கதே.மு.தி.க கூட்டணி முறிந்தது. 2014ம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்று தேர்தலைச் சந்தித்த தே.மு.தி.க., போட்டியிட்ட 14 தொகுதிகளிலும் படுதோல்வியடைந்தது.

2016ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் ம.தி.மு.க., வி.சி.க., த.மா.கா., கம்யூனிஸ்ட் கட்சிகள் அங்கம்வகித்த மக்கள் நலக்கூட்டணியில் இணைந்து, முதல்வர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு தேர்தலைச் சந்தித்தார் விஜயகாந்த். ஆனால், தேர்தல் முடிவில் ம.ந.கூட்டணி உட்பட தே.மு.தி.கவும் போட்டியிட்ட 104 தொகுதியிலும் படுதோல்வியடைந்தது. உளுந்தூர்பேட்டையில் போட்டியிட்ட விஜயாகாந்த் மூன்றாம் இடத்துக்குத் தள்ளப்பட்டு கட்டுப்பணம் இழந்தார். 2019ம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலிலும் அ.தி.மு.கபா.ஜ.க கூட்டணியில் இடம் பெற்று நான்கு தொகுதியில் மட்டுமே போட்டியிட்ட தே.மு.தி.க அனைத்திலும் படுதோல்வியடைந்தது.

நிர்வாகிகள் பலர் அ.தி.மு.கவுக்கும் தி.மு.கவுக்கும் சென்றனர். போதாக்குறைக்கு விஜயகாந்தின் உடல்நிலையும் மோசமடைந்தது.

விஜயகாந்த், தான் அரசியலுக்கு வருவதற்கு முன்பாகவே 1989ல் ஈரோட்டில் இலவச மருத்துவமனை, சென்னை சாலிகிராமத்தில் இலவச மருத்துவமனை, ஆண்டுதோறும் பள்ளி மாணவர்களுக்கு இலட்சக்கணக்கில் கல்வி நிதியுதவி, எம்.ஜி.ஆர் காது கேளாதோர்வாய் பேசாதோர் பள்ளி, லிட்டில் ஃபிளவர் பார்வையற்றோர் பள்ளிகளுக்கு நன்கொடை, தமிழகம் முழுவதும் 60 இடங்களில் இலவச கணினிப் பயிற்சி மையம், இலவச திருமண மண்டபங்கள், ஏராளமான ஏழை ஜோடிகளுக்கு இலவசத் திருமணம், கேப்டன் ஸ்போர்ட்ஸ் அகாடமி எனக் கலக்கியவர். குஜராத் பூகம்பம், கார்கில் போர், சுனாமி, கும்பகோணம் பள்ளி தீ விபத்து எனப் பல சோக நிகழ்வுகளுக்குத் தன் சொந்தச் செலவில் நிவாரணங்களை கொடுத்து உதவிவந்தார். அரசியல் கட்சி தொடங்கிய பின்னர் தானே புயல், ஆந்திரா புயல், ஒடிசா வெள்ளம் எனப் பாரபட்சமின்றி முதல் ஆளாக முன்வந்து நிவாரணங்கள் வழங்கினார். மேலும், பல்வேறு தமிழர் சார்ந்த உரிமைப் போராட்டங்களையும் முன்னின்று நடத்தினார். இது போன்று எண்ணிலடங்கா சாதனைகளுக்குச் சொந்தக்காரர் விஜயகாந்த்.

தனிப்பட்ட முறையில் அனைவராலும் நேசிக்கக்கூடிய மனிதராகவே வாழ்ந்தார் விஜயகாந்த்.

# வெள்ளி விழாக் காணும் விபுலானந்தா ஏனைய முன்பள்ளிகளுக்கு முன்மாதிரி

## காரைதீவு பிரதேச செயலாளர் ஜெகராஜன் புகழாரம்

வெள்ளிவிழாக் காணும் விபுலானந்தா மொண்டசோரி பாடசாலை ஏனைய முன்பள்ளிகளுக்கு முன்மாதிரியாக சிறந்த பாடசாலையாக திகழ்கிறது . இவ்வாறு காரைதீவு விபுலானந்தா மொண்டசோரி பாடசாலையின் 25 ஆவது வருடாந்த விபுலமணிகளின் விடுகை விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் தெரிவித்தார்.

விபுலமணிகளின் விடுகை விழா



பாடசாலை பணிப்பாளர் சபை உறுப்பினர் ஓய்வுநிலை அதிபர் க.புண்ணியநேசன் தலைமையில் காரைதீவு இராமகிருஷ்ண சங்க பெண்கள் பாடசாலையில் நடைபெற்றது .

பிரதம அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் கலந்து கொள்ள, சிறப்பு அதிதியாக காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், கௌரவ அதிதியாக வவுனியா மாவட்ட செயலக பிரதம கணக்காளர் சிவசுந்தரம் சசிகரன், கலந்து சிறப்பித்தார்கள்.

சிறப்பு அதிதி காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் உரையாற்றுகையில், எமது பாரம்பரியங்களை கலாசாரங்களை இளம் சந்ததிக்கு நாங்கள் எடுத்துக் கூற வேண்டும் . முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த மண்ணில் அவரது நாமத்தோடு இயங்கும் இப்பாடசாலை பணிப்பாளர் சகா அவர்களின் வழிகாட்டலில் சிறப்பாக இயங்கி வருவது பாராட்டுக்குரியது என்றார். விபுலானந்தாவில் பயின்று கடந்த வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த 09 மாணவர்கள் தங்கப் பதக்கம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள். ஏனைய விடுகை பெறும் பயிலும் மாணவர்களும் அங்கு பரிசுகள் வழங்கி பாராட்டப்பட்டார்கள்.

ஆசிரியர்களான ரம்யா சனுஜா ஆகியோர் பெற்றோரால் கௌரவிக்கப்பட்டார்கள். பிள்ளைகளின் கண்கவர் கலைநிகழ்ச்சிகள் அனைவரையும் கவர்ந்தன.

(காரைதீவு குறூப் நிருபர்)









# இளைஞர்கள் மத்தியில் மாரடைப்பு அதிகரித்து வருவதன் காரணம் என்ன?

இளைஞர்கள் மத்தியில் மாரடைப்பு ஏற்படுவது தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் இது தொடர்பாக இந்திய மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா சில அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

பொதுவாக மாரடைப்பு ஏற்படுவது என்பது வயதானவர்கள், ஏற்கனவே தொற்றாநோய் உள்ளவர்கள் மத்தியில்தான் அதிகம் ஏற்படும். ஆனால் கொரோனா காலத்திற்கு பிறகு மாரடைப்பு ஏற்படுவது அதிகரித்து வருகிறது. குறிப்பாக இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் மத்தியிலும் மாரடைப்பு ஏற்படுவது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. விளையாட்டு போட்டிகளின் போது இளைஞர்கள் திடீரென மாரடைப்பு ஏற்பட்டு மயங்கி விழுந்து உயிரிழக்கும் செய்திகளும் அவ்வப்போது வெளியாகி பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.

குஜராத்தில் நவராத்திரி கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக 'கர்பா' நடனம் ஆடியபோது ஒரு பெண் மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர் உட்பட 6 பேர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளனர்.

மேலும் இந்த 6 பேரை தவிர அதே காலகட்டத்தில் அந்த மாநிலத்தில் மேலும் 22 பேர் இறந்துள்ளனர்.

கொரோனாவால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் மாரடைப்பு ஏற்படுமோ என்ற அச்சம் பொதுமக்கள் மத்தியில் எழுந்த நிலையில் இது தொடர்பாக இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் விளக்கம் கொடுத்துள்ளார்.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் இது தொடர்பாக விரிவான ஆய்வை மேற்கொண்டதாகவும், கொரோனா தொற்றால் கடுமையாக பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று மீண்டவர்கள் 1 முதல் 2 ஆண்டுகள் வரை கடினமாக வேலை செய்வது, வேகமாக ஓடுவது, கடுமையாக ஜிம்மில் உடற்பயிற்சி செய்வது, ஓய்வெடுக்காமல் வேலைசெய்வது போன்றவற்றில் இருந்து விலகி இருப்பதால் மாரடைப்பு ஏற்படுவதை தடுக்க முடியும் என இந்திய மருத்துவ கவுன்சிலான ஐசிஎம்ஆர் நடத்திய விரிவான ஆய்வின் அடிப்படையில் இந்த தகவல்களை பரிந்துரைத்திருப்பதாகவும் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

# யாழ் துணைதூதரகத்தில் வரவேற்பு, சுழிபுரத்தில் சிறப்புப் பட்டிமன்றம்

இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் தில்லி கலை இலக்கிய பேரவையின் மூத்த ஆலோசகரும், குஜராத் வடோதரா தமிழ்ச்சங்கத் தலைருமான சி.பி. கண்ணன், வழக்கறிஞரும், ஆன்மீக இலக்கிய சொற்பொழிவாளரும் மனிதவள மேம்பாட்டு பயிற்சியாளருமான தமிழ்த்தென்றல் முனைவர் எஸ்.டி கலையமுதன் (சேலம்) ஆகிய இருவரையும் நேற்று (29.12.2023) பகல் 12.00 மணிக்கு யாழ்பாணத்திலுள்ள தூதரகத்தில் இந்திய துணைதூதுவர் ராகேஷ் நடராஜ் வரவேற்று உபசரித்தார்.

சுழிபுரம் கலைமகள் இலவசக் கல்வி நிலையம் மற்றும் தில்லி கலை இலக்கிய பேரவை இணைந்து இன்று 30 ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு வழங்கும் சிறப்பு பட்டிமன்றத்தில் சிறப்பு விருந்தினராக இந்தியாவிலிருந்து சி.பி. கண்ணனும்,எஸ்.டி கலையமுதன் ஆகிய இருவரும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

மாணவர்களிடையே பெருகிவரும் போதைப்பாவனைக்கு காரணம் குடும்பத்தின் கவனயீனமா? அல்லது சமூகத்தின் நெறிபிறழ்வா? என்ற தலைப்பில் சிறப்பு பட்டி மன்றம் நடைபெறஉள்ளது. குடும்பத்தின் கவனயீனம் என்ற தலைப்பில் இராசகோபால் டனோஜினி, துரைசிங்கம் ஷசாந்தன், பன்னீர்செல்வம் பிரணவன், லக்சிகா சிவாஸ்கரன் ஆகியோரும் 'சமூகத்தின் நெறிபிறழ்வே' என்ற தலைப்பில் இராஷசுந்தரம் வேணுஜன், சங்கவி பரம்சோதி, பரநிருபசிங்கம் பிரியங்கன், தங்கராசா நிலக்ஷன் ஆகியோர் சொற்போர் நிகழ்த்துகின்றனர்.

இன்று 30 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்கா மணிமண்பத்தில் பகவான் ரமண மகரிஷியின் 144வது ஜெயந்தி தின நிகழ்வில் எஸ்.டி கலையமுதன் ஆன்மீக அருளுரை நிகழ்த்துகின்றார்.

இந்நிகழ்வினை இலங்கை சப்ரகமுவ பல்கலைகழக விரிவுரையாளர் சுதர்சனி நாகரத்தினம், துரைசிங்கம் சுதர்சன், இந்திய அயலக ஒருங்கிணைப்பாளரும், தில்லி கலை இலக்கிய பேரவை பொதுச்செயலாளருமான பா.குமார், பேரவையின் தலைவர் ப.அறிவழகன் ஆகியோர் ஒருங்கிணைக்கின்றனர். இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அவர்கள் வேண்டுகோள் விடுகின்றார்கள்.

**எச்.எச்.விக்கிரமசிங்க**








# வரலாறு வனைந்திருக்கும் தலைவன் திருமாவளவன்

விடுதலைவீரன் மலைச்சாமி திறந்து விட்டபாதையில், அந்தப் புரட்சிப் போர்க்கொடியை உயர்த்திப் பிடித்த பெருமகன் திருமாவளவன் கடந்து வந்திருக்கும் பாதை மலர்ப்படுக்கையல்ல. நிலக்கண்ணிகள் புதைந்த பாதை அது.

ஆதிக்கசாதிகளின் அட்டகாசம், ஆளுவோரின் அனுசரணை, அரசுப்பொறிமுறைகளின் அரண், காவல்படைகளின் கடாட்சம், மையநீரோட்டக் கட்சிகளின் புறக்கணிப்பு, ஆதிக்கக் கருத்தியலின் வலிமை, பணத்திற்கும் பதவிகளுக்கும் விலைபோக எப்போதும் தயாராயிருக்கும் அரசியல் குழுக்கள் என்று நெஞ்சிற்கு நேரெதிரே நிற்கும் பெருஞ்சுவரை உடைத்து நொருக்கும் தானையின் அரும்பெருந்தலைவன் திருமாவளவன்.

திருமாவளவன் காலத்தின் வார்ப்பு. சரித்திரம் நமக்குப் புனைந்து தந்திருக்கும் தலைவன். தமிழக அரசியல் வானில் ஒளிர்ந்திருக்கும் விடுதலை நட்சத்திரம்.

மார்க்சியப் பேறிஞன் பிளெக்கனோவ் கூறுவது போல் சமூக நிலைமைகள் கனிந்து வருகிறபோதுதான், குறிப்பிட்ட சகாப்தத்தின் சமுதாயத் தேவைகளை நிறைவேற்றும் வல்லமை கொண்டவன், அந்த சமூக உறவுகளின் விளைபொருளாய், சமூக விசையாய் வெளிக்கிளம்புகிறான். அந்தக் காலத்தின் தேவையை நிறைவேற்ற வல்லவன், அந்த நேரத்திற்கு பயன் விளைவிக்கும் வல்லமை கொண்டவன் எழுகின்றபோது, அந்த சமுதாய அமைப்பு அவனுக்கான பாதையை அடைத்துவிடக் கூடாது என்றும் அந்த அறிஞன் ஒருபடி மேலே போய் அறிவுறுத்துகிறான். திருமாவளவன் என்ற அந்தப் பெருந்தலைவன் கால் நூற்றாண்டு காலத்திற்கு மேலாக அந்தப் புரட்சிப்பாதையில் அணிவகுத்து நிற்கிறான். சமரசங்களுக்கு இடந்தராத பெருந்தலைவனின் பாதை அது. சீனப்பெருந்தலவன் மாஓ கூறுவது போல 'சதுரமாய் சிந்தித்து வட்டமாய் முடிவு காணும்' சிந்தனையாளன் திருமாவளவன்.

மார்க்ஸின் பாதையில், அம்பேத்கரின் சிந்தனையில், பெரியாரின் வழிகாட்டலில் தன் விடுதலைப் பாதையைச் செதுக்கிக் கொண்ட தமிழ்த்தலைவன் திருமாவளவன். சாதியாலும் மதத்தாலும் மொழியாலும் இனத்தாலும் பால்வேறுபாடுகளாலும் வேறுபல முரண்பாடுகளாலும் சிதறடிக்கப்பட்ட உழைக்கும் மக்களின் விடுதலைக்கான அரசியலே தலித்தியம் என்று நம் காலத்தின் பரட்சி சுலோகத்தை முழங்குகிறார் திருமாவளவன்.

இன்றைய இந்திய அரசியல் சூழலில், அரசியல் அறங்கள் அற்றுப்போய், மனிதாபிமானமோ நேர்மையோ வாய்மையோ துளியளவும் இல்லாத சீரழிவின் அதலபாதாளத்தில் நாடு அமிழ்ந்தி நிற்கும் நிலையில், சமூக நீதியையும் ஒடுக்கப்பட்டோருக்கான குரலையும் உரத்து ஒலிக்கும் வலிமைமிகு தலைவனின் வருகை, செயற்பாடு என்பன நம் சமூகத்திற்கு உயிரூட்டம்தரும் பிராண வாயு போன்றவை.

'நாங்கள் தெரிவு செய்திருக்கும் பிரதிநிதிகளால் ஆக்கப்படுவதற்கு மேலாக வேறு எந்தச் சட்டங்களும் இல்ல' என்ற ஜனநாயக் குரல் மிகப் பழையது. அதை இன்று மீளச் சொல்ல வேண்டியிருக்கிறது. மிக எளிய ஜனநாயக நடைமுறைகளே பேணப்படாத அரசியல் நிலையில், விளிம்பு நிலையில் உள்ள மக்கள் தலைநிமிர முடியாத கொடுங்கோன்மையின் நுகத்தடிக்குள் சிக்கித் துயருறும் நிலையில் அந்த மக்களின் ஓர்மக்குரலாய், பஞ்சை பராரிகளின் காவலனாய், ஒடுக்கப்பட்ட மக்களின் காவல் அரணாய், சிந்தனையால், எழுத்தால், பேச்சால் , செயலால் அந்த மக்களை வழிநடத்தும் தகுதி மிக்கோனாய் திருமாவளவன் என்ற தலைவன் கிடைத்திருப்பது தமிழ் மக்களின் நற்பேறு.



சமூகநீதி என்பது வேண்டப்படுவது; சர்ச்சைக்கு இடமில்லாதது; நவீன சிந்தனையின் இன்றியமையாத கூறு. ஆனால், அது தானே செயற்படுவதில்லை. சமூகநீதி எவ்வளவுதான் உன்னதமாகப் போற்றப்பட்டாலும் போராட்டத்தால்தான் அது சாதிக்கப்படுகிறது. மக்கள்திரளின் தொடர்ந்து வந்த யுத்தத்தால்தான்அது சாத்தியமாகிறது. பெரும் எதிர்ப்பை மீறித்தான் அங்குலம் அங்குலமாக அது நகரவேண்டியிருக்கிறது.

சரியாக அறிவுபோதம் ஊட்டப்படாத மக்கள் திரள் அரசியலில் அநியாயத்தையும் இழைக்கவல்லது. நேர்மையாகவும் மக்கள் நலன் கருதியும் செயற்பட்ட மேன்மை மிக்க அரசியல் தலைவர்கள் நம் தேசத்தில் இருந்திருக்கிறார்கள். அந்த மேன்மையின் பாரம்பரியத்தை முன்னெடுத்துச் செல்ல வல்ல பெருமகனாக இந்திய அரசியலில் திருமாவளவன் நிலைபெறுவார். மணிவிழா காணும் தலைவன் தொல் திருமாவளவன் பல்லாண்டு பல்லாண்டு காண என் வாழ்த்துகள்!

**மு.நித்தியானந்தன்**
**லண்டன்**

# அவுஸ்திரேலிய மண்ணில் தயாரான முதல் விண்கலம்!



## எதிர்வரும் மார்ச் மாதம் விண்ணுக்கு ஏவப்படுகின்றது

அவுஸ்திரேலிய மண்ணில் தயாரிக்கப்பட்ட முதல் விண்கலம் விண்ணில் ஏவப்படுகி ற து . உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ரொக்கெட் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் குயின்ஸ்லாந்தில் உள்ள ஏவுதளத்த்தில் இருந்து ஏவப்பட திட்டமிடப்பட்டுள்ளது.




கோல்ட் கோஸ்ட்டைத் ( GOLD COAST) தளமாகக் கொண்ட நிறுவனமான 'கில்மோர் ஸ்பேஸ்' 'எரிஸ்' என்ற பெயரில் இறுதி தயாரிப்புகளை முடித்துள்ளது. இது 2024 மார்ச் மாதத்தில் ஏவப்படும் என்று நம்புகிறது.

25 மீட்டர் உயரமும், 30 தொன் எடையும் கொண்ட மூன்று நிலை எரிஸ் ரொக்கெட் ஐந்து ஹைப்ரிட் என்ஜின்களால் இயக்கப்படுகிறது.

முதலில் 2023 இல் புறப்படும் என எதிர்பார்க்கப்பட்ட எரிஸ் விண்கலத்தை, 500 கிமீ உயரத்தில் உள்ள பூமத்திய ரேகை சுற்றுப்பாதையில் ஏவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் ஒப்புதல்கள் உட்பட பல்வேறு ஒழுங்குமுறை அனுமதிகளைப் பெற்ற பிறகு, 'கில்மோர் ஸ்பேஸ்' இப்போது புதிய அவுஸ்திரேலிய விண்வெளி ஏஜென்சியின் இறுதி ஏவுகணை ஒப்புதலுக்காக காத்திருக்க வேண்டி உள்ளது.

குயின்ஸ்லாந்தில் உள்ள போவெனுக்கு வெளியே பிரத்தியேகமாகக் கட்டப்பட்ட ஏவு தளத்தில் அவுஸ்திரேலியக்கு சொந்தமான ரொக்கெட் ஏவப்படுவது என்பது வரலாற்றுச் சிறப்புமிக்கதாக கருதப்படுகிறது.

1950களின் போது அமெரிக்க மற்றும் பிரித்தானிய ரொக்கெட்டுகள் தெற்கு அவுஸ்திரேலியல் உள்ள வூமேரா சோதனை தளத்திலிருந்து ஏவப்பட்டன. மேலும் எரிஸ் வெற்றி பெற்றால், விண்கல தொழில்நுட்பத்தை அணுகும் 12 ஆவது நாடாக அவுஸ்திரேலிய மாறும்.

" நாங்கள் வேறொருவரின் தொழில்நுட்பத்தை நம்பியுள்ளோம். ஆனால் இப்போது இது எங்களுடையது, நாங்கள் இதை வடிவமைத்துள்ளோம், அவுஸ்திரேலியாவில் இதை உருவாக்கியுள்ளோம். இது அவுஸ்திரேலிய உருவாக்கம்" என முன்னாள் வங்கியாளரும் வாழ்நாள் முழுவதும் விண்வெளி ஆர்வலருமான கில்மோர் கூறியுள்ளார்."எனவே, அவுஸ்திரேலியா என்ன விரும்புகிறது என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன், மேலும் எங்கள் முக்கிய கூட்டாளிகள் அனைத்தும் நூற்றுக்கணக்கான மில்லியன் முதல் பில்லியன் டொலர்களை ஏவுதளத் திறனுக்காகக் கொட்டி வருகின்றன என்பதை உணர வேண்டும்" என விண்வெளி ஆர்வலருமான கில்மோர் தெரிவிக்கிறார்.

அவுஸ்திரேலியாவின் வளர்ந்து வரும் விண்வெளித் துறையின் உறுப்பினர்கள், 2022 தேர்தலுக்குப் பிறகு, இந்தத் துறையில் அரசு கவனம் செலுத்தாததால், இலாபகரமான வாய்ப்புகள் இழக்கப்படுவதைப் பற்றி தொடர்ந்து எச்சரிக்கையை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்த ஆண்டு மே மாதம் 'கில்மோர் ஸ்பேஸ்' தொழிற்சாலைக்கு விஜயம் செய்த பிரதமர் அந்தோனி அல்பானீஸ் எரிஸ் விண்கல திட்டத்தை "ஒரு சிறந்த அவுஸ்திரேலிய வெற்றியின்கதை" என்று அறிவித்தார்.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

# விண்வெளி ஆய்வில் மேலும் புதிய சாதனைகளுக்கு இந்தியா திட்டம்!

## 2024 இல் உலக அரங்கில் உச்சத்தை எட்டுவதற்கு இஸ்ரோ ஆயத்தம்!

**2023** ஆம் ஆண்டு நிறைவடையும் இந்நிலையில் இந்த ஆண்டு இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோவிற்கு மிகச் சிறந்த ஆண்டாக அமைந்திருந்தது. சந்திரயான் 3 வெற்றி மற்றும் ஆதித்யா எல் ஒன் விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது என வரிசையாக சாதனைகளை படைத்து இஸ்ரோ இந்த ஆண்டில் மிக முக்கிய வெற்றிகளை எட்டியுள்ளது.

இந்நிலையில் 2024 ஆம் ஆண்டு இஸ்ரோ நிகழ்த்தவுள்ள சாதனைகள் மேலும் பலவாகும். 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இஸ்ரோவும் நாசாவும் சேர்ந்து தயாரித்த நிசார் என்ற செய்மதியை இஸ்ரோ விண்ணுக்கு செலுத்துகிறது. இதன் மூலம் பூமியின் எக்கோ சிஸ்டம், கடல் மட்டம் உயர்வு, கடல் நிலத்தடி நீர்மட்டம், இயற்கையாக உள்ள பிரச்சினைகள், பூகம்பங்கள், சுனாமிகள், எரிமலை வெடிப்பு, நிலச்சரிவு உள்ளிட்ட தகவல்கள் எல்லாம் கிடைக்க பெறும்.

இந்த செய்மதியில் சிந்தடிக் அப்பாச்சி ரேடார் என்ற கருவி பொருத்தப்பட்டுள்ளது. இந்த செய்மதியை இஸ்ரோ விண்ணுக்கு செலுத்தி லோ எர்த் ஓர்பிட் என்ற பகுதிக்கு எடுத்துச் செல்லும்.அங்கிருந்து பூமியை இந்த செய்மதி ஆய்வு செய்து தரவுகளை இஸ்ரோவிற்கு அனுப்பி வைக்கும். இந்த செய்மதி ஜனவரி மாதமே விண்ணில் பாய உள்ளது.






இந்த செய்மதி பூமியில் நிகழ்வுள்ள வானிலை குறித்த தகவல்களை அனுப்புகிறது. இதற்காக இந்த செய்மதியில் 6 இமேஜ் சேனல்களும் 19 சவுண்ட் சேனல்களும் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் பூமியில் நிகழ உள்ள வானிலை மாற்றங்கள் குறித்த தகவல்களை எல்லாம் உரிய நேரத்தில் இஸ்ரோ மையத்திற்கு அனுப்பும் வகையில் இது உருவாக்கப்பட்டுள்ளது. இந்த செய்மதி மூலம் வானிலை தகவல்களை மிகத் துல்லியமாக கண்காணிக்க முடியும்.

இதேவேளை ககன்யான் 1 திட்டமும் ஆரம்பமாகின்றது. பூமியிலிருந்து சுமார் 400 கிலோமீட்டர் உயரத்திற்கு மனிதர்களை கூட்டி சென்று அங்கு அவர்கள் மூன்று நாட்கள் ஆய்வு நடத்தி பின்னர் அவர்கள் பூமிக்கு வருவதுதான் இந்த ககன்யான் திட்டத்தின் நோக்கமாக இருக்கிறது. இந்தியா முதன்முதலாக மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் திட்டம் இதுதான். இதனால் இந்தத் திட்டத்தை ஆய்வு செய்வதற்காக பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டம் முதல் கட்டமாக ஆய்வு நடத்தப்பட்டு வெற்றிகரமாக முடிந்துள்ளது. இந்நிலையில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் மனிதர்களுக்கு பதிலாக ரோபோவை வைத்து 2ம் கட்ட ஆய்வு நடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது. ககன்யான் திட்டத்தை மனிதர்கள் அல்லாமல் ரோபோக்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு சோதனை செய்யப்படும். இது வெற்றிகரமாக அமையும் பட்சத்தில் 2024 அல்லது 2025ம் ஆண்டு தொடக்கத்தில் மனிதர்கள் விண்வெளிக்கு செல்ல இஸ்ரோ ஏற்பாடு செய்து விடும்.

இதேசமயம் இஸ்ரோ ஏற்கனவே மங்கள்யான் திட்டத்தில் மிகப்பெரிய வெற்றியை பெற்ற நிலையில் தற்போது மங்கல்யான் 2 அதாவது இரண்டாம் திட்டத்திற்காக தயாராகி வருகிறது. இதன்படி இந்த திட்டம் 2024 ஆம் ஆண்டு வெற்றிகரமாக நிகழும் என தெரிகிறது. இதுவும் இஸ்ரோவிற்கு மிகப்பெரிய சாதனை திட்டமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுமார் 100 கிலோ எடை கொண்ட இந்த விண்கலம் தற்போது ஏவுவதற்காக தயார் செய்யப்பட்டு வருகிறது. இது விண்வெளியில் இருந்து பூமிக்கு வரும் எக்ஸ்ரே கதிர்களை ஆய்வு செய்வதற்காக அனுப்பப்படுகிறது.மற்றொரு முயற்சியாக இஸ்ரோ வெள்ளிக் கிரகத்தை ஆய்வு செய்வதற்காக சுக்ரயான் என்ற விண்கலத்தை தயார் செய்து வருகிறது.

இந்த விண்கலமும் 2024 ஆம் ஆண்டு விண்ணில் ஏவப்படுவதற்கு அதிகமான வாய்ப்புகள் உள்ளன. இது வெள்ளி கிரகத்திற்கு சென்று அங்கு உள்ள சுற்றுவட்ட பாதையில் சுற்றி வெள்ளி கிரகத்தில் உள்ள எரிமலைகள் , அங்கு உள்ள நில அமைப்புகள், அந்த கிரகத்திற்கான தனித்துவமான செயல்பாடுகள் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்ய தயார் செய்யப்படுகிறது.

செவ்வாய் தொடர்ந்து வெள்ளி கிரகத்திலும் இஸ்ரோ ஆய்வு செய்ய முனைந்திருப்பது பாராட்டப்பட வேண்டியதாகும். தொடர்ந்து இஸ்ரோ வளர்ச்சி பாதையில் செல்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி தேர்தலில் மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டும்

## ஐ.தே.கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு

ஜனாதிபதி தேர்தலில் நாட்டு மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டுமென, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அத்துடன், அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல் நடைபெறுமெனவும், அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் காலி மாவட்ட கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (28) நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றிய போது,

"பல வருடங்களின் பின்னர் எமது நாட்டு கிறிஸ்தவ மக்கள், இந்த முறை நத்தார் தினத்தை கொண்டாடியுள்ளனர். கடந்த 03 வருடங்களாக பொருளாதார நெருக்கடி, உலகில் ஏற்பட்ட தொற்றுநோய் நிலைமை காரணமாக எமது நாட்டு மக்கள் மிகவும் அழுத்தத்துடனே இருந்தார்கள்.

இந்த அழுத்தம் இறுதியில் நாங்கள் வங்குராத்து தேசமாக மாறினோம். வங்குராத்து அடைந்த இந்த நாட்டை பொறுப்பேற்க யாரும் இல்லாத சந்தர்ப்பத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

எப்படியாவது ஒருவருடமும் 6 மாதங்களான போது, வங்குராத்து நிலையிலிருந்து நாட்டை மீட்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முடிந்தது. இதேவேளை 2024 ஜனவரியில், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜெய்க்கா நிறுவனம் உட்பட எமக்கு நன்கொடை வழங்கிய மற்றும் கடன் வழங்கிய குழுவினர் நிறுத்தியிருந்த அபிருத்தி வேலைத்திட்டங்கள் மீண்டும் இலங்கையில் ஆரம்பிக்கப்படவுள்ளன.



இந்நிலையில், அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு தற்போது பிரதான விடயமாக இருப்பது ஜனாதிபதி தேர்தல் எப்போது நடத்துவதென்பதாகும்.

ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர்களாக களமிறங்கப் போவதாக பலரும் தெரிவித்திருக்கின்றனர். எவ்வாறிருந்தாலும், இலங்கை மக்கள் இது தொடர்பாக மிகவும் சிந்தித்து செயற்பட வேண்டியுள்ளது. ஜனாதிபதி தேர்தலுக்கு முன்வரும் வேட்பாளர்களுக்கு நாடொன்றை நிர்வகிக்க முடியுமா, வேட்பாளர்களுக்கு உலகத் தலைவர்களை சமாளித்துக்கொண்டு இலங்கையை முன்னுக்கு கொண்டுசெல்ல முடியுமா என்பவை தொடர்பாக மக்கள் சிந்திக்க வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விகிக்ரமசிங்க கடந்த ஒரு வருடமும் 06 மாதங்களுக்குள் அமெரிக்க ஜனாதிபதி, சீன ஜனாதிபதி, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான் மற்றும் இந்தியப் பிரதமர் உள்ளிட்ட உலகில் பிரதான தலைவர்களின் கவனத்தை இலங்கையின்பால் செலுத்தியே இலங்கையை வங்குராத்து நிலையிலிருந்து மீட்டு, முன்னோக்கிக் கொண்டுசெல்கிறார். உலகில் பல நாடுகள் வங்குராத்து நிலையிலிருந்து இன்னும் மீள முடியாத நிலையிலிருக்கும் போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அனுபவம் மற்றும் ஆளுமை காரணமாக எமது நாட்டை வங்குராத்து நிலையிலிருந்து மீட்டுள்ளார்" என்றார்.

### சுமார் 90 வகை பொருட்களுக்கு...

சிறப்பு வர்த்தக வரி விதிக்கப்பட்டுள்ள 65 வகையான பொருட்களுக்கு VAT வரி தாக்கம் செலுத்தாதென்றும் அவர் தெரிவித்தார்.

"பெறுமதி சேர் வரி (VAT)திருத்தச் சட்டம் மற்றும் அதன் தாக்கம்" என்ற தலைப்பில் (28) ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அலுவலக அரச வருமானப் பிரிவின் பணிப்பாளர் கே. கே. ஐ. எரந்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெறுமதி சேர் வரி என்பது நமது நாட்டின் வருமானத்தை அதிகரிக்கும் காரணிகளில் பிரதானமானதாகும். 2023 ஆம் ஆண்டில் VAT வரி மூலம் 600 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வருமானம் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் சுமார் 450 பில்லியன் மாத்திரமே பெறப்பட்டது. 2024 ஆம் ஆண்டுக்கு VAT வரி மூலம் சுமார் 1,400 பில்லியன் ரூபா வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்பார்ப்பு எவ்வாறு இருந்தாலும், வெளிவாரி, உள்ளக மற்றும் வரி விலக்கு போன்ற வரிக் கசிவு போன்ற காரணிகளால் இந்த வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதை நாம் உறுதிப்படுத்தியுள்ளோம்.

இதன் காரணமாக வரி செலுத்துவோர் எண்ணிக்கையை அதிகரிக்கவும், வரி விலக்குகளை குறைக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. ஆனாலும்,மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வரி விலக்குகள் நீக்கப்படவில்லைனெ'றும் ஜனாதிபதி அலுவலக அரச வருமானப் பிரிவின் பணிப்பாளர் கே. கே. ஐ. எரந்த தெரிவித்தார்.

### அரசாங்க உர நிறுவனங்களில்...

ஊக்குவிப்புத் தொகை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (28) விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் அமைச்சில் நடைபெற்றது.

இதற்காக 20 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இவ்விரு நிறுவனங்களிலும் பணிபுரியும் 420 ஊழியர்களுக்கும் இரண்டு மாத அடிப்படை சம்பளத்துக்கு சமமான ஊக்கத்தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தற்போது இவ்விரு உர நிறுவனங்களும் விவசாயத்துக்ககான உர வகைகளை வழங்கி வருவதுடன், இந்த நிறுவனங்களின் சேவைகளை மேலும் விரிவுபடுத்துவதுடன், இந்த நிறுவனங்களின் சேவைகளையும் விரிவுபடுத்துமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர இவ்விரு நிறுவனங்களின் தலைவர் கலாநிதி ஜகத் பெரேராவுக்கு பணிப்புரை விடுத்தார். அதற்கான சட்டங்களில் திருத்தம் தேவையென்றால் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு ஆதரவளிக்கும் என்றும் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்காலத்தில் உர விநியோக நடவடிக்கையிலிருந்து அரசு விலகும் என்பதால், இவ்விரு கழகங்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும். தனியாருக்குப் போட்டியாக உர விநியோகத்தை முன்னெடுக்க வேண்டும்' என அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது தனியார் நிறுவனங்கள் பூச்சிக்கொல்லி மற்றும் களைக்கொல்லிகளை அதிக விலைக்கு விற்பனை செய்து விவசாயிகளை சுரண்டுவதாகவும், எனவே இந்த வியாபாரத்தில் ஏகபோக உரிமையை ஒழிக்க அரசாங்கத்தின் தலையீட்டில் போட்டியை உருவாக்க வேண்டும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

### வற்... வரி திருத்தத்தின் தாக்கத்தை...

வலியுறுத்தப்பட்டது. கல்விச் சேவைகள், மின்சாரம், சுகாதாரம், மருத்துவம், பயணிகள் போக்குவரத்து, அனைத்து காய்கறிகள் மற்றும் பழங்கள் உட்பட சுமார் 90 வகையான பொருட்களுக்கு (வற்) வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதென்றும், சிறப்பு வர்த்தக வரி விதிக்கப்பட்டுள்ள 65 வகையான பொருட்களுக்கு (வற்) வரி விதிக்கப்படாதென்றும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் ஏ. எம். நபீர், ஜனாதிபதி அலுவலகத்தின் அரச வருமானப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் எம். ஜே. குணசிறி மற்றும் பணிப்பாளர் கே. கே. ஐ. எரந்த, இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஜனக எதிரிசிங்க ஆகியோரும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

மேலும் இங்கு கருத்து தெரிவித்த நிதி அமைச்சின் வரிக் கொள்கை ஆலோசகர் தனுஜா பெரேரா,

2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் (வற்) வரி விதிக்கப்பட்டுள்ளது. அதன்படி அது இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டு சுமார் 20 வருடங்கள் கடந்துள்ளன.ஆரம்ப கட்டத்தில், (வற்) வரி இரண்டு வீதமாக இருந்தது. ஆனால் பின்னர் அது மூன்று வீதமாக திருத்தப்பட்டன. இவ்வகையில், அவ்வப்போது வெவ்வேறு மதிப்புகளில் இருந்த இந்த VAT வரி விகிதம், 2019 இல் செய்யப்பட்ட வரித் திருத்தங்களால் 08 வீதமாக ஆகக் குறைக்கப்பட்டது. இதனால் அரச வருமானம் பெருமளவு குறைந்துள்ளது. பின்னர் அது 15% ஆக உயர்த்தப்பட்டது.

கடந்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட (வற்) வரிதிருத்தச் சட்டம் மூலம், 2024 ஜனவரி 01முதல் (வற்) வரியை 15 வீதத்திலிருந்து 18 வீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இனிமேலும் எம்மால் சலுகைகளை அடிப்படையாக கொண்டு முன்னோக்கிச் செல்வது கடினம். அரச வருமானத்தை அதிகரிக்கும் அத்தியாவசியமான காரணத்தினால் இந்த வரித் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதைக் கூற வேண்டும். இதற்குத் தேவையான பல்வேறு வரித் திருத்தங்கள் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2019 ஆம் ஆண்டாகும் போது (வற்) வரிக்காக பதிவு செய்யப்படும் எல்லை 15 மில்லியனாக காணப்பட்டது. ஆனால் 2020 ஜனவரி 01 முதல் அந்த எல்லை 300 மில்லியனாக உயர்த்தப்பட்டது. அதன் மூலம் (வற்) வரிக்கு பதிவு செய்யப்பட்டிருந்த ஏராளமான வரிக் கோப்புகள் செயலிழந்தன. ஆனால் பின்னர் அது 80 மில்லியனாகக் குறைக்கப்பட்டது. புதிய திருத்தத்தின்படி 2024 ஜனவரி 01 முதல் 60 மில்லியன் ரூபாவாக மேலும் குறைக்கப்பட்டுள்ளது.

ஏராளமான வரி விலக்குகளை நீக்க புதிய திருத்தத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் இழந்த பெரும் வருமானத்தை மீட்பதே இதன் நோக்கமாகும்.

ஆனால் சிலர் இந்த நடவடிக்கை குறித்து தவறான கருத்துக்களை சமூகமயமாக்கி வருகின்றனர். ஜனவரி 01 ஆம்திகதி முதல் வாழ்வது கடினம் என்றும், (வற்) வரி திருத்தத்தால் ஒரு குடும்பம் பெரும் செலவைச் சுமக்க நேரிடும் என்றும் சிலர் கூறுகின்றனர். (வற்) வரி திருத்தம் காரணமாக சில மேலதிக செலவுகள் ஏற்படும் என்றாலும், சிலர் கூறும் அளவுக்கு அது அதிகமானதாக இருக்கமாட்டாது என்பதையும் தெரிவிக்க வேண்டும்.பெறுமதி சேர் வரி உள்வாங்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகள் மீது விதிக்கப்பட்டுள்ள ஏனைய வரிகளை நீக்கி, உரிய வரி திருத்தங்களை செய்து மக்களுக்கு நிவாரணம் வழங்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் ஏற்கனவே எடுத்து வருகிறது.

எடுத்துக்காட்டாக, சில பொருட்களை இறக்குமதி செய்யும் போது துறைமுகம் மற்றும் விமான நிலைய வரி விதிக்கப்படும். வற் வரி அதிகரிப்பின் தாக்கத்தை குறைக்க அந்தப் பொருட்களிலிருந்து துறைமுகம் மற்றும் விமான நிலைய வரியை நீக்கி வற்வரியை மாத்திரம் விதிப்பது போன்ற சாதகமான நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட உள்ளன என்றும் நிதி அமைச்சின் வரிக் கொள்கை ஆலோசகர் தனுஜா பெரேரா தெரிவித்தார்.

### இந்திய இலங்கை ஒத்துழைப்பின்படி...

வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதும் தனது பணியாகும் என இந்திய உயர்ஸ்தானிகர் உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா நேற்று பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் தெரிவித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் புதிய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று (29) அலரி மாளிகையில் நடைபெற்றது.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், உத்தேச கூட்டுத் திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான வழிவகைகள் குறித்தும் ஆராயப்பட்டன. இக்கலந்துரையாடலில் சூரியசக்தி, காற்றாலை மின்சாரம் உள்ளிட்ட எரிசக்தி துறையில் இந்திய முதலீடுகளை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள், திருகோணமலை எண்ணெய் களஞ்சிய தாங்கிகள், துறைமுகம், ரயில்வே தொடர்பான கூட்டுத் திட்டங்கள் மற்றும் விவசாயம் மற்றும் கடற்றொழில் அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள கடன் மறுசீரமைப்பு வசதிகளை விரிவுபடுத்தி நிவாரணப் பொருட்கள், உணவு மற்றும் மருந்துகளை வழங்குவதன் மூலம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு பிரதமர் நன்றி தெரிவித்தார்.

திரவத்தன்மை சிக்கல்களை தீர்க்க சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து உதவித்திட்டத்தைப் பெறுவதற்கு இந்தியா அளித்த ஆதரவுக்கும் பிரதமர் நன்றி தெரிவித்தார்.

புதிய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, 2007 முதல் 2010 வரை இலங்கையில் பணியாற்றிய காலத்தை நினைவு கூர்ந்ததுடன், இருதரப்பு நட்புறவையும் ஒத்துழைப்பையும் மேலும் வலுப்படுத்துவதற்காக மீண்டும் ஒருமுறை கொழும்புக்கு விஜயம் செய்யக் கிடைத்தமையை பெரும் பாக்கியமாக கருதுவதாக தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் சத்தியஞ்சல் பாண்டே, ஆலோசகர் எல்டஸ் மேத்யூஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### கிளிநொச்சி நகரில் இன்று...

10.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறுகிறது. இந்நிகழ்வை சிறப்பிக்கும் வகையில் அனைத்து அரசியல் கட்சிகள், மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், வர்த்தக சமூகத்தினர் ஆகியோர் கலந்துகொள்வதாக, மேற்படி நிகழ்வு ஏற்பாட்டுக் குழு உறுப்பினர்களான பரமநாதன் குமாரசிங்கம், சுப்பிரமணியம் மோகனராசா தெரிவித்தனர். இந்நிகழ்வின் போது, தென்னிந்திய தனியார் தொலைக்காட்சியான சீ தமிழ் தொலைக்காட்சியில் சரி கம ப இசை நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற கில்மிஷா மற்றும் அப்போட்டியில் கலந்துகொண்டு சிறப்பாக பாடிய அசானி ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்படுவதாகவும், அவர்கள் தெரிவித்தனர்.

### 48 மணி நேரத்துக்குள்...

மாவா, 5 6 2 போதை மாத்திரைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. இவர்களில் போதைக்கு அடிமை யான 51 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### ஆறு முதல் 09 மாதக் குழந்தைகளுக்கு...

தெரிவிக்கப்பட்டுள்ளது. அம்மை நோயாளர்கள் அதிகமாக பதிவாகியுள்ள 09 மாவட்டங்களை இலக்கு வைத்து இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, கண்டி, யாழ்ப்பாணம், குருணாகல் மற்றும் கல்முனை ஆகிய மாவட்டங்களில் தடுப்பூசி ஏற்றும் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. தொற்று நோய்க்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

எதிர்வரும் ஜனவரி 06 திகதி காலை 9:00 மணி முதல் மாலை 4:00 மணி வரை அருகிலுள்ள தடுப்பூசி மையங்களுக்குச் சென்று, 06 முதல் 09 மாதங்களுக்கிடையிலான குழந்தைகளுக்கு இந்த தடுப்பூசியை செலுத்துக்கொள்ளுமாறு பெற்றோருக்கு சுகாதார மேம்பாட்டு பணியகம் அறிவித்துள்ளது.

## இன்றைய பலன்கள்

**( 27. 12. 2023 )**



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் ஏற்படும். புனித பயணங்கள் அதிகரிக்கும்.

**ரிஷபம்:**
ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். தொழில் ரீதியாக எடுத்த புது முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்:**
மனச்சோர்வு அதிகரிக்கும். எளிதில் முடிக்கக்கூடிய காரியங்கள் கூட மலைப்பாக தோன்றும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும்.

**கடகம்:**
தொழில் முன்னேற்றம் உண்டு. வியாபார போட்டிகள் அதிகரிக்கும் அதை சமாளிப்பீர்கள். குடும்பத்திற்காக அதிகம் செலவிட நேரிடும்.

**சிம்மம்:**
எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். இல்லம் தேடி நல்ல தகவல் வந்து சேரும்.

**கன்னி:**
தைரியத்தோடும் தன்னம்பிக்கையோடும் செயற்படுவீர்கள். தர வரவு திருப்திகரமாக இருந்தாலும் விரயங்கள் அதிகரிக்கும்.

**துலாம்:**
நினைத்தது நிறைவேறும். நிகழ்கால தேவைகள் பூர்த்தியாகும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும்.

**விருச்சிகம்:**
தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.

**தனுசு:**
ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை தேவை. அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியில் ஆதாயம் குறைவாகவே கிடைக்கும்.

**மகரம்:**
உடல்நலம் சீராகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். கடன் சுமை குறையும். கவலைகள் அகலும்.

**கும்பம்:**
லாபமும் விரையமும் சம அளவில் இருக்கும். செலவிற்கு முன்னதாகவே வரவு வந்து சேரும்.

**மீனம்:**
அதிக விரயங்கள் ஏற்படலாம். திடீர் திடீரென மாற்றங்களும் எதையும் அரைகுறையாக செய்து அவதிப்படும் சூழ்நிலையும் உண்டு.

### GCE A/L பரீட்சைக்கான...

மாதிரி வினாக்களை இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் மூலம் வெளியிடுவது தடைசெய்யப்படுமெனவும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுபோன்ற செயல்களில் ஈடுபடும் நபர்கள் அல்லது குழுக்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

2023 க.பொ.த உயர்தரப் பரீட்சை ஜனவரி 04 முதல் 31 வரை நடைபெற உள்ளது.

### யாழ். சிறுமி கில்மிஷாவுக்கு...

அண்மையில் சென்றிருந்தார். இதன்போதே கில்மிஷாவை அவர் வாழ்த்தியதுடன், கில்மிஷாவின் எதிர்கால முயற்சிகளுக்கும் அவர் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த ஒருவர், தென்னிந்திய தொலைக்காட்சி இசை நிகழ்ச்சியில் பங்குபற்றி வெற்றி பெற்றமை இதுவே முதல் தடவையென்பதும் குறிப்பிடத்தக்கது.

### இளம் தாயும் 02 வயதுடைய...

இளம் தாயான சிவநாதன் வசந்த குமாரி (வயது 22) மற்றும் இவரது இரண்டு வயது மகனதும் சடலங்களே மீட்கப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாய் தனது மகனை கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்தாரா? என தாம் சந்தேகிப்பதுடன், இது தொடர்பாக விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த இளம் தாயின் கணவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வீட்டிலிருந்து வெளியேறியதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும், பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

### சனத் நிஷாந்தவின் ஜீப்...

தெரிவிக்கின்றனர். தங்கொட்டுவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொள்வதற்காக இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் சென்று கொண்டிருந்த போதே மாரவில மொதரவெல்ல தேவாலயத்துக்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை (29) இந்த விபத்து இடம்பெற்றதனையடுத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் தொடர்பில் கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

### இந்திய பெருங்கடலில்...

புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் (Geological Survey & Mines Bureau) தெரிவித்தது.

முதலாவதாக ஏற்பட்ட நிலநடுக்கம் 4.8 ரிச்டர் (Richter scale) அளவில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் பதிவாகியதாக, அமெரிக்க புவியியல் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட நிலநடுக்கங்கள் 5.2, 5.8 மற்றும் 5.0ஆக ரிச்டர் (Richter scale) அளவுகோலில் பதிவாகியுள்ளன.

இரண்டாவது மற்றும் நான்காவது நிலநடுக்கங்கள் (ரிச்டர் அளவில் 5.2 மற்றும் 5.0) 10 கிலோமீற்றர் ஆழத்திலும், மூன்றாவது நிலநடுக்கம் (5.8 ரிச்டர் Richter scale அளவில்) 7.7 கிலோமீற்றர் ஆழத்திலும் பதிவாகியதாகவும் கூறப்பட்டுள்ளன.

### வெளி மாவட்டங்களிலிருந்தும்...

யாழ். போதனா வைத்தியசாலையில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இருப்பதால், அதனைச் சூழவுள்ள இடங்களில் உள்ளவர்கள் அதிக கவனத்துடன் இருக்க வேண்டுமெனவும், அவர் கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"டெங்கு நுளம்புகள் வீரியம் மிக்க நுளம்புகளாக உள்ளதாக பூச்சியியல் ஆய்வு சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது பரவியுள்ள டெங்குத் தொற்று மூன்றாவது வகை நுளம்பின் மூலமே பரவுவதாகவும் இம்முறையே டெங்குநோய் யாழ்ப்பாணத்தில் பரவியுள்ளது.

ஆயினும், மக்கள் மத்தியில் இதற்கான தற்காப்பு வளங்கள் இல்லாதுள்ளது.

இதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலையில் 150 பேர் நாளாந்தம் டெங்குநோய் சிகிச்சைக்கு வருகின்றனர். இம்மாதம் 1,284 பேர் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர்" என்றார்.

# யுனைடெட் டிரவல்ஸ் என்ட் ஹொலிடேஸ் (பிரைவேட்) லிமிடெட் புதிய இலச்சினையை அறிமுகம்






இலங்கையின் ஹஜ் மற்றும் உம்ரா சேவை வழங்குவதில் முன்னணி நிறுவனமான யுனைடெட் டிரவல்ஸ் என்ட் ஹொலிடேஸ் (பிரைவேட்) லிமிடெட் தனது புதிய இலச்சினையை அறிமுகம் செய்துள்ளது.

குறித்த அறிமுக நிகழ்வு கொழும்பில் உள்ள பிரபல தனியார் ஹோட்டலில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் ஹஜ் மற்றும் உம்ரா சேவை வழங்குவதில் கடந்த 6 வருடங்களாக தனக்கான ஒருவழியில் யாத்திரியர்களின் அமோக ஆதரவுடன் நாடளாவிய ரீதியில் சேவையை வழங்கும் ஒரே ஒரு நிறுவனம் என்பதில் பெருமிதம் கொள்கின்றது.

புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட இலச்சினை, ஒரு விமானத்தின் ஜன்னல் பகுதி இருப்பதுடன், அது ஆங்கில எழுத்து யூ வடிவத்தையும், அந்த ஜன்னலுகுள் இருந்து பார்க்கும் போது விமானத்தின் பின் பகுதி போன்ற வடிவமைப்பு ஆங்கில எழுத்து "டி" வடிவத்தை கொண்டுள்ளது. இலச்சினையின் தோற்றத்தில் பல வர்ணங்கள் அடங்கியுள்ளன.

அந்த நிறங்கள் ஒற்றுமை, அரவணைப்பு, அன்பு மற்றும் சுதந்திரம் ஆகியவற்றை வெளிப்படுத்தி நிற்கின்றது.

யுனைடெட் டிரவல்ஸ் என்ட் ஹொலிடேஸ் (பிரைவேட்) லிமிடெட் சர்வதேச தரத்தில் தனது வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப, தனது சேவையை வழங்கி வருவதுடன், கடந்த பல வருடங்களாக இலங்கை மக்கள் மத்தியில் ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் அபிமான நம்பிக்கையை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த அறிமுக நிகழ்வில், நிறுவனத்தின் ஊடாக சேவையை பெற்றவர்களுக்கான நினைவு சின்னங்கள் வழங்கிவைத்து கௌரவித்தமை நிறுவனத்தின் தரம், தனித்துவம் சிறப்பு மற்றும் புத்தாக்கத்தையும் எடுத்து காட்டுகின்றது.

பொருளாதார சிக்கலின் பின்னர் நாட்டில் உம்ரா கட்டணம் விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்திருந்த வேளையில் அனைவருக்கும் உம்ரா எனும் தொனிப்பொருளில் கடந்த ஒக்டோபர் மாதம் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் எனும் சாதாரண கட்டணத்தில் அறிமுகம் செய்து உம்ரா துறையில் பாரிய புரட்சியை ஏற்படுத்தியது.

இலங்கையில் தற்போது உம்ரா சேவை துறையில் விலையை கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளதுடன், சந்தையில் விலையை நிர்ணயிக்கும் சக்தியாக இந்நிறுவனம் திகழ்கின்றது.

எதிர்காலத்தில் ஹஜ் கடமையை நிறைவேற்ற உள்ளவர்களுக்கான பல்வேறு சிறப்பம்சங்களை கொண்ட புதிய ஒரு பேகேஜை அறிமுகம் செய்யவுள்ளது.




# மதிப்புமிக்க தேசிய விருதுகள் மூலம் கௌரவிக்கப்பட்ட Link Natural









ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் 2022/23, NCE வருடாந்த ஏற்றுமதி விருதுகள் 2023, தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார விசேடத்துவ விருதுகள் 2022 ஆகியவற்றில் மகுடம்

CIC Holdings இன் துணை நிறுவனமும், மூலிகைகள் அடங்கிய தயாரிப்புகளின் முன்னணி உற்பத்தியாளருமான Link Natural Products (Pvt) Ltd நிறுவனம், 2023 ஆம் ஆண்டை மிக சிறப்பாக நிறைவு செய்யும் வகையில், தேசிய அரங்கில் 3 முக்கிய மதிப்புமிக்க விருதுகளைப் பெற்றுள்ளது. இதன் மூலம் அனைத்து துறைகளிலும் நிறுவனம் சிறப்பை வெளிப்படுத்தியுள்ளது. Link Natural ஆனது, ஆயுர்வேத மருந்துகளுக்கு மேலதிகமாக, மூலிகை சுகாதார மற்றும் தனிநபர் பராமரிப்பு தயாரிப்புகளின், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D) அடிப்படையிலான முன்னணி உற்பத்தியாளரும் சந்தைப்படுத்துனருமாகும்.

Link Natural Products நிறுவனமானது, 1982ஆம் ஆண்டு ஏற்றுமதி சந்தைக்கான வாசனைத் திரவிய அத்தியாவசிய எண்ணெய்களை உற்பத்தி செய்ய ஆரம்பித்ததன் மூலம் செயற்படத் தொடங்கியது. அது ஆரம்பத்திலிருந்தே இவ்வணிகத்தின் மிக உயர்ந்த முன்னுரிமையாக, தரத்தை பேணி வருகின்றது.

அதன் ஆரம்பத்தை தொடர்ந்து, சில வருடங்களுக்குப் பின்னர், ஆயுர்வேத மருந்துகள், மூலிகை சுகாதார மற்றும் தனிநபர் பராமரிப்பு பொருட்கள் தயாரிப்பில் நிறுவனம் களமிறங்கியது. அதன் வலுவான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திறன்கள் இவ்வணிகத்திற்கு உறுதியான அடித்தளத்தை ஏற்படுத்தியது. நிறுவனம் ஆயுர்வேதத்தின் பொக்கிஷங்களை தொடர்ச்சியாக ஆராய்ந்து, ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வழிவகுக்கும் வகையில், தற்கால நுகர்வோரின் தேவைகளை பூர்த்தி செய்ய, பாதுகாப்பான, பயனுள்ள, தரமான சுகாதார பராமரிப்பு மற்றும் தனிநபர் பராமரிப்பு தயாரிப்புகளை கொண்டு வர முயற்சி செய்கிறது.

Link Natural நிறுவனத்திற்கு 2022/23 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகளில் Best Exporter Herbal and Ayurveda (மூலிகை மற்றும் ஆயுர்வேத சிறந்த ஏற்றுமதியாளர்) விருது வழங்கப்பட்டமையானது, அனைவரையும் ஈர்க்கும் வகையிலான மற்றும் சிறப்பான சாதனையாக அமைகின்றது. இது இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த கௌரவமாகும் என்பதோடு, இது ஏற்றுமதி சிறந்த செயல்திறன் மற்றும் நிறுவனத்தின் அர்ப்பணிப்புக்கான ஒரு சான்றாகும். Link Natural Products அதன் ஒப்பற்ற ஏற்றுமதி வருமானம், ஏற்றுமதிக்கான மதிப்புச் சேர்த்தல், வேலைவாய்ப்பு உருவாக்கம், சந்தை பல்வகைமை, ஏற்றுமதி வருமான வளர்ச்சி ஆகிய காரணிகளின் அடிப்படையில் இந்த விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள், வருடாந்தம் நாட்டின் ஏற்றுமதித் துறை மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு சிறந்த பங்களிப்பை வழங்கிய ஏற்றுமதியாளர்களை அங்கீகரித்து அவர்களுக்கு கௌரவமளிப்பதற்காக, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் (EDB) ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வாகும்.

அந்த வகையில், இலங்கை தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனத்தினால் (NCE) ஏற்பாடு செய்யப்பட்ட 31ஆவது வருடாந்த ஏற்றுமதி விருதுகள் 2023 இல், மருத்துவம் தொடர்பான ஆயுர்வேத மற்றும் மூலிகைப் பொருட்கள் துறை உள்ளிட்ட மருந்துப் பொருட்களுக்கான தங்க விருதையும் (Large category) Link Natural வென்றது.

# அனைவருக்கும் சூரிய மின்சக்தி வசதியை வழங்க கைகோர்த்த அமானா மற்றும் சிங்கர்



நிலைபேறான எதிர்காலத்துக்கான முக்கியமான படியை முன்னெடுத்து வைக்கும் வகையில், அமானா வங்கி பிஎல்சி மற்றும் சிங்கர் பிஎல்சி ஆகியன கைகோர்த்துள்ளன. அதனூடாக அனைவருக்கும் சகாயமான விலையில் சூரிய வலுவை பெற்றுக் கொடுத்து, பசுமையான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்துள்ளது. இந்தப் பங்காண்மையினூடாக, சிங்கர் பிஎல்சியினால் நம்பிக்கை மற்றும் தர உத்தரவாதத்துடன் வழங்கப்படும் சூரிய மின் தொகுதிகளை, சகாயமான விலையில், மக்களுக்கு நட்பான நிதி வசதியினூடாக அமானா வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த வசதிக்கான உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் சிங்கர் ஸ்ரீ லங்கா குழும பிரதம நிறைவேற்று அதிகாரி / முகாமைத்துவ பணிப்பாளர் மஹேஷ் விஜேவர்தன மற்றும் அமானா வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால் ஆகியோர், வங்கியின் நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் உப தலைவர் சித்தீக் அக்பர், நுகர்வோர் நிதியளிப்பு தலைமை அதிகாரி ரியாஸ் நூர், சிங்கர் பிஎல்சி விற்பனை பணிப்பாளர் வஜிர தென்னகோன். தகவல் தொழில்நுட்ப பணிப்பாளர் கபில பெரேரா, வியாபார அபிவிருத்தி முகாமையாளர் வருண விக்ரமசிங்க, சந்தைப்படுத்தல் முகாமையாளர் பியும் ஜயதிலக மற்றும் உதவி செயற்பாட்டு முகாமையாளர் மனோஜ் ரூபசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமானா வங்கியின் நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் உப தலைவர் சித்தீக் அக்பர் கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையின் ஒவ்வொரு இல்லத்தின் நம்பிக்கையை வென்ற, சிங்கருடன் இந்தப் பங்காண்மையை வெளியிடுவதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம். அதனூடாக சகாயமான விலையில் நிலைபேறான வலுத் தீர்வுகளை வாழ்வுக்கு வளமூட்டி வளர்ச்சிக்கு கைகொடுக்கும் எமது நோக்கத்துக்கமைய இயங்கக்கூடியதாக உள்ளது.

இந்த செயற்பாட்டில் அங்கம் வகிப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைவதுடன், எமது வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் வலு நுகர்வு மற்றும் செலவுகளை நிர்வகித்துக் கொள்ளவும் பங்களிப்பு வழங்குகின்றோம். அத்துடன், நிலைபேறான உலகை கட்டியெழுப்பவும் பங்களிப்பை வழங்குகின்றோம்." என்றார்.

# ஐந்து விருதுகளுடன் SLIM National Sales Awards 2023 நிகழ்வில் பிரகாசித்த HNB



இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான HNB PLC, 2023 ஆம் ஆண்டுக்கான கௌரவமான SLIM National Sales Awards (NSA) நிகழ்வில் மீண்டும் வெற்றியீட்டியுள்ளதுடன், அதன் அர்ப்பணிப்புள்ள ஊழியர்கள் மொத்தம் ஐந்து விருதுகளைப் பெற்றுள்ளனர்.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மொனார்க் இம்பீரியலில் நடைபெற்ற இந்த விருது வழங்கும் நிகழ்வு, பல்வேறு பிரிவுகளில் விருதுகளை வென்ற HNB ஊழியர்களின் சிறப்பான சாதனைகளை கொண்டாடியது.

HNB கிண்ணியா கிளையைச் சேர்ந்த அகீல் அஹமட் வங்கித் துறையில் தனித்து நின்று, "விற்பனை நிறைவேற்று அதிகாரி" பிரிவில் தங்க விருதை வென்றார். அதேபோன்று, SOLO யூனிட்டைச் சேர்ந்த தசுன் உத்துருவெல்ல தனது சிறப்பான திறமைகளை வெளிப்படுத்தி, வங்கித் துறையில் "விற்பனை மேற்பார்வையாளர்" பிரிவில் தங்க விருதைப் பெற்றார். வர்த்தக அபிவிருத்தி பிரிவின் வலையமைப்பு விற்பனைப் பிரிவைச் சேர்ந்த ஹர்ஷன முனசிங்க வங்கித் துறையிலும் பிரகாசித்ததுடன், "விற்பனை முன்னணி" பிரிவில் தங்க விருதைப் பெற்றுள்ளார்.

வங்கியின் வெற்றிக்கு மேலும் பங்களிக்கும் வகையில், HNB யாழ்ப்பாண மெட்ரோ கிளையைச் சேர்ந்த அரிச்சந்திரன் யோகதாஸ், வங்கித் துறையில் சிறந்து விளங்கி, "விற்பனை நிறைவேற்று அதிகாரி" பிரிவில் வெண்கல விருதைப் பெற்றுள்ளார், அதேவேளை, வணிக அபிவிருத்தி பிரிவின் வலையமைப்பு விற்பனைப் பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஷானக்க சமரசிங்க வெண்கல விருதைப் பெற்றார். "டெரிட்டரி முகாமையாளர்" பிரிவில், பல்வேறு விற்பனைப் பாத்திரங்களில் வங்கியின் திறமையை மேலும் எடுத்துக்காட்டுகிறது.

HNB இன் சிறப்புக்கான அர்ப்பணிப்பு, சிறந்த செயல்திறனுக்கான அங்கீகாரத்திற்கு அப்பாற்பட்டது. வங்கி தனது ஊழியர்களுக்கு பயிற்சி திட்டங்கள், வழிகாட்டுதல் மற்றும் தொழில் முன்னேற்ற முயற்சிகள் மூலம் ஏராளமான தொழில்முறை வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு வாய்ப்புகளை வழங்குகிறது. புத்தாக்கம், ஒத்துழைப்பு மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் நேர்மறையான மற்றும் உள்ளடக்கிய பணிச் சூழலை வளர்ப்பது HNB இன் முக்கிய மதிப்புகளுக்கு ஒருங்கிணைந்ததாக உள்ளது.

# இலங்கை ஜூனியர் ஓபன் கோல்ஃப் சம்பியன்ஷிப் 2023



இரண்டு நம்பிக்கைக்குரிய ஜுனியர் கோல்ப் வீரர்கள், ஜெவான் சதாசிவம் மற்றும் கயா தலுவாத்தே ஆகியோர் தங்கப் பிரிவு ஆண் மற்றும் பெண் பிரிவுகளில் முறையே இலங்கை ஜுனியர் ஓபன் கோல்ஃப் சம்பியன்ஷிப் 2023 இல் முதல் பரிசுகளைப் பெற்றனர், இது ரோயல் கொழும்பு கோல்ஃப் கிளப்பில் (ஆர்.சி.ஜி.சி) சமீபத்தில் ஓர் வண்ணமயமான பரிசளிப்பு விழாவை நடாத்தியது.

இந்நிகழ்ச்சியை இலங்கை கோல்ஃப் ஏற்பாடு செய்தது மற்றும் 15 வது ஆண்டு சாதனை படைக்க ப்ரிமா சன்ரைஸ் அனுசரணை வழங்கியது. 100 இற்கும் மேற்பட்ட ஜுனியர் கோல்ப் வீரர்கள் இந்தியாவிலிருந்து பல கோல்ப் வீரர்களுடன் போட்டியிட்டனர், அவர்களிடையே அனைத்து பிரிவுகளிலும் மிகச் சிறந்த போட்டியைக் கண்டனர்.

முதல் நாளில் இருந்தே ஜெவான் சதாசிவம் தனது விதிவிலக்கான திறன்களைக் காண்பிப்பதன் மூலம் முன்னிலையில் பிரகாசித்தார். 210 புள்ளிகளைப் பெற்று முதல் நிலையை தக்கவைத்தர். யானிக் குமாரா 220 குறிப்பிடத்தக்க புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப் பெற்றார், அவரும் மூன்று நாட்களில் சில நிலையான செயல்திறனைக் காட்டினார். தனது சீரற்ற முதல் நாளிற்கு பிறகு ரெஷான் அல்காமா தனது நிலையை மீண்டும் எதிர்த்துப் போராடுவதற்கும், 3 ஆவது இடத்திற்கு வருவதற்கும் தனது வகுப்பு 221 புள்ளிளைப் பெற்றார்.

கயா தலுவாத்தே தனது முதல் இடத்தில் 219 புள்ளிகளுடன் முழுமையான கட்டுப்பாட்டை எடுத்ததால், பெண்கள் தங்கம் ஒரு குதிரை பந்தயமாக இருந்தது, இந்தியன் சர்க்யூட்டில் தனது அனுபவத்துடன் அவர் தனது பிரிவில் உள்ள மற்ற போட்டியாளர்களை விட ஒரு படி முன்னணியில் இருந்தார். ஷெரின் பாலசூரியா 231 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தார். இந்தியாவிலிருந்து ஆலியா ஆச்சரி 236 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

226 புள்ளிகளுடன் ஆண்களிடையே அநுராதபுரத்திலிருந்து குறைந்த வசதிகளுடன் வரும் வெள்ளிப் பிரிவில் ஆதித்யா வீரசிங்க வெற்றிகரமாக வெளிப்பட்டார். கேசவ் அலங்கம 233 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தையும் கைப்பற்றினார். பெண்களுக்கான வெள்ளியில், கீயா அபயரத்னே 233 புள்ளிகளுடன் தனது ஆதிக்கத்தை வெளிப்படுத்தினார், கையான் ஜோன் பிள்ளை 239 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தை பெற்றார்.

பெண்களுக்கான வெள்ளிப் பிரிவில் கெயா அபேரத்ன அவரின் அபார திறமையால் 291 புள்ளிகளுடன் முதல் நிலையை வென்றார். இது 346 புள்ளிகளுடன் அராரதி சமரரத்னை இரண்டாவது இடத்திற்கு தள்ளியது, சித்தாரா லோரன்ஸ் 375 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

லாவிது பிரேமரத்னே 184 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கத்தை வென்றார். மேலும் உதேரா பண்டாரா 202 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தார். யெஹன்சா சேனாநாயக்க 207 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

பெண்களுக்கான வெண்கலப் போட்டியில் இந்தியப் பெண்கள் பவிக்கா உன்னி 185 புள்ளிகள் பெற்று சாம்பியன் பட்டமும், அவரது சகோதரி அவிக்னா உன்னி 186 புள்ளிகள் பெற்று இரண்டாம் இடமும், கெய்ட்லின் நார்டன் 209 புள்ளிகளுடன் மூன்றாவது இடமும் பெற்றனர்.

ஆண்களுக்கான செப்பு பிரிவில், 112 புள்ளிகளுடன் ரெவான் அமரசிங்க வெற்றியைப் பெற்றார், அதே நேரத்தில் இந்திய ஜுனியர் விவியன் சிங் 114 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தார், அதே நேரத்தில் டேனிக் தலுவாத்தே 128 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்தார். பெண்கள் நிகழ்வில் இந்தியாவின் ஆசிதா ராவ் 123 புள்ளிகளுடன் முதல் இடத்தைப் பிடித்தார், இது குறிப்பிடத்தக்க திறமையையும் திறனையும் காட்டியது. விஹாரா ஹெராத் 143 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப் பிடித்தார், இந்தியாவைச் சேர்ந்த ஆஷ்னா அமோகா, 150 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

இலங்கை கோல்ஃப், தலைவர் ரணில் பீரிஸ் நாடு முழுவதும் உள்ள ஜுனியர் கோல்ப் வீரர்களுக்கு ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

# TAGS Awards 2023 விழாவில் நான்கு விருதுகளால் கௌரவிக்கப்பட்ட DIMO



அண்மையில் இடம்பெற்ற TAGS Awards 2023 இல் நான்கு விருதுகளை DIMO நிறுவனம் வென்றுள்ளது. இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விருது வழங்கும் விழாவில், கூட்டாண்மை அறிக்கையிடலுக்கான அர்ப்பணிப்புக்காக, DIMO நிறுவனத்திற்கு இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த அறிக்கையிடலில் சிறந்து விளங்கியமைக்கான, தங்க விருதின் இணை வெற்றியாளராக தெரிவான DIMO, 'Diversified Holdings Group Turnover up to 50Bn' பிரிவில் தங்க விருதையும் வென்றது. அத்துடன், டிஜிட்டல் யுகத்தில் பெருநிறுவன அறிக்கையிடலுக்கான நிறுவனத்தின் புத்தாக்கமான அணுகுமுறைக்காக, 'Digitally Transformative Reporting' பிரிவில் வெள்ளி விருதின் இணை வெற்றியாளராக DIMO தெரிவு செய்யப்பட்டது.

இறுதியாக, 'Sustainability Reporting' இல் சிறந்து விளங்குவதற்கு அது கொண்டுள்ள அர்ப்பணிப்புக்காக வெண்கல விருதையும் நிறுவனம் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# SLIM Digis 2.3 விருதுகளில் பிரகாசித்த Fems மற்றும் Clogard Fresh



தமது புத்தாக்கமான டிஜிட்டல் சந்தைப்படுத்தல் உத்திகளுக்கு ஒரு சிறந்த சான்றாக, மதிப்புமிக்க SLIM Digis 2.3 விருதுகளில் Fems மற்றும் Clogard Fresh ஆகியன, முறையே மெரிட் விருது மற்றும் டிஜிட்டல் வெண்கல விருதுகளைப் பெற்றுள்ளன.

மாதவிடாய் சுகாதாரத்தை வலியுறுத்தும் Fems இன், "மகள்கள் தினம்" எனும் அதன் சிறந்த டிஜிட்டல் பிரசாரத்திற்காக, SLIM Digis இனால் Merit விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச மகள்கள் தின கொண்டாட்டத்துடன் இணைந்தவாறு 2022 ஒக்டோபரில் இந்த பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதயத்தைத் தூண்டும் இந்த பிரசாரமானது, தந்தைக்கும் மகள்களுக்கும் இடையிலான இறுக்கமான உறவை திறமையாக காண்பித்ததன் மூலம், மாதவிடாய் ஆரோக்கியம் தொடர்பில் சமூகத்தில் காணப்படும் களங்கத்தை நீக்கும் வகையில் அமைந்திருந்தது.

இந்த பிரசாரமானது, ஒரு சக்தி வாய்ந்த செய்தியை சமூகத்திற்கு வழங்கியதோடு, பெண்களின் வாழ்க்கையில் ஆண்களின் முக்கிய பங்கை வலியுறுத்தியது. அத்துடன் மாதவிடாய் பற்றிய உரையாடல்களில் வெட்கப்பட வேண்டாம் என்பதை அவர்களிடையே ஊக்குவிக்கிறது. இதன் மூலம் மாதவிடாய் ஆரோக்கியம் பற்றிய சமூகத் தடைகளை முறியடிப்பதற்கும் மாதவிடாய் தொடர்பில் வெளிப்படையான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனும் Fems இன் அர்ப்பணிப்பு, இங்கு மீண்டும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது இவ்வர்த்தகநாமத்தின் முற்போக்கான அணுகுமுறையை பிரதிபலிக்கிறது. வாய்ச் சுகாதார பராமரிப்பில் Clogard Fresh (க்ளோகார்ட் ப்ரெஷ்) முன்னணியில் திகழ்கின்றது.

அதன் மாறுபட்ட 'உங்களால் மறைக்க முடியாத புத்துணர்ச்சி' எனும் பல்தரப்பட்ட தளத்தில் அமைந்த டிஜிட்டல் பிரசாரத்திற்காக, டிஜிட்டல் வெண்கல விருதை அது வென்றுள்ளது. புதிய தலைமுறை பார்வையாளர்களை மூலோபாய இலக்காகக் கொண்டு, Instagram, TikTok, WhatsApp, Facebook போன்ற பிரபல சமூக வலைத்தளங்களில் இப்பிரசாரம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

# கிழக்கின் குரல்



## கிழக்கு மாகாணத்தில் 'யுக்திய' விசேட சுற்றிவளைப்பு

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



ஜனாதிபதியின் விசேட பணிப்புரையின் பெயரில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் கிழக்கு மாகாணத்தில் நேற்று நகர்புறங்களில் விசேட போதைப்பொருள் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பாதுகாப்பு அமைச்சினால் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட போதைப் பொருள்பரிசோதனைமட்டக்களப்பு மாவட்டத்திலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதேவேளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரிந்த பண்டார தலைமையில் நேற்று பொதுமக்கள் அதிகம் கூடும் நகர்புறங்களில் விசேட போதைப்பொருள் சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. நகருக்குள் வரும் சகல பொது மக்களின் அடையாள அட்டைகள் பரிசோதனை செய்யப்பட்டதுடன் அவர்களது பயண பைகளுக்கு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

விசேட மோப்ப நாய்களின் உதவியுடன் அதிரடி படையினரின் பலத்த பாதுகாப்பு மத்தியில் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சந்தேகத்தின் பேரில் மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் நகரில் 2 பேர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைக்காக மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதுடன். மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக போதைப்பொருள் பரிசோதனை பொலிஸ் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.



ஜனாதிபதி தேர்தல், பொது தேர்தலில் புதிய கூட்டணி அமைப்பது தொடர்பில் ஐக்கிய காங்கிரஸ் கட்சியினர், முன்னாள் அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். இது சம்பந்தமாக கட்சியின் உயர்பீடத்துடன் பேசி முடிவெடுக்கப்படும் என கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார். இப்பேச்சு வார்த்தையில் கட்சியின் பொருளாளர் முஸ்னத் மற்றும் ரஞ்சித் பீரிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மன்னம்பிட்டி பாலத்தில் பயணிப்போர் அவதானம் மாற்று வழிகளை பயன்படுத்துமாறும் பொலிஸார் அறிவுறுத்தல்

( மாளிகைக்காடு குறூப் நிருபர்)



பொலன்னறுவை மட்டக்களப்பு வீதியின் கல்லலையிலிருந்து மன்னம்பிட்டிப் பாலம் வரையிலான 04 இடங்களில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

எனினும், போக்குவரத்துக்கு எந்த இடையூறும் இல்லை, சில வேளைகளில் நீர்மட்டம் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் நேற்றுமுன்தினம் இரவு முதல் திறக்கப்பட்டதன் காரணமாக வினாடிக்கு சுமார் 3000 கன அடி நீர் மகாவலி ஆற்றுக்கு திறந்து விடப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## பராக்கிரம சமுத்திரத்தின் வான் கதவுகள் திறப்பு மட்டக்களப்பு - பொலன்னறுவை பிரதான வீதிக்கு பூட்டு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



பொலன்னறுவை பராக்கிரம சமுத்திரத்தின் வான் கதவுகள் திறக்கப்படவுள்ளதால், மட்டக்களப்பு பொலன்னறுவை பிரதான வீதி மறுஅறிவித்தல் வரை முற்றாக மூடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெலிகந்த, திம்புலாகலை மற்றும் மட்டக்களப்புக்கு செல்லும் பயணிகளின் வசதிக்காக கதுருவெல புகையிரத நிலையத்திலிருந்து மானம்பிட்டி வரை விசேட புகையிரத சேவை காலை 10.30 மணி முதல் இடம்பெறவுள்ளதாக கதுருவெல ரயில் நிலைய அதிபர் தெரிவித்தார்.

மற்றும் மட்டக்களப்பு நோக்கி பயணிக்கும் வாகனங்கள் மாற்றுப் பாதையாக கிரிதலே, எலஹெர, பகமூனை, தெஹிஅத்த, கண்டிய வீதி ஊடாக பயணிக்க முடியுமென பொலனறுவை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப்பணிப்பாளர் தெரிவித்தார்.

## திருக்கோவிலில் இலக்கிய போட்டி வெற்றியாளர்களுக்கு பரிசளிப்பு விழா



கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் திருக்கோவில் பிரதேச செயலகம் நடாத்திய இலக்கிய போட்டியில் (திறந்த பிரிவு) வெற்றிப் பெற்றவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.நிரோஜினி தவநீதனின் ஒருங்கமைப்பில் திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் கந்தவனம் சதிசேகரன் மற்றும் இலக்கிய போட்டியில் வெற்றி பெற்ற வெற்றியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கல்முனை காணிப்பதிவாளராக சிவசுந்தரம் சுசிகரன் கடமையேற்பு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



கல்முனை காணி மற்றும் மாவட்ட பதிவகத்தின் புதிய காணிப் பதிவாளராக கிரான்குளத்தைச்சேர்ந்த திரு. சிவசுந்தரம் சுசிகரன் அண்மையில் தனது கடமைகளை கல்முனை காரியாலயத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் கடந்த 2005ஆம் ஆண்டிலிருந்து மட்டக்களப்பு காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் மேலதிக காணிப்பதிவாளராக சுமார் ஒன்பது ஆண்டுகளும், மண்முனை மேற்கு வவுனதீவு பிரதேச செயலகத்தில் மேலதிக மாவட்டப் பதிவாளராக இரண்டு ஆண்டுகளும், இறுதியாக மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் மேலதிக மாட்டப் பதிவாளராக சுமார் 07 ஆண்டுகளும் கடமை புரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'யுக்திய சுற்றிவளைப்புக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்

### மு.கா பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான்

(ஒலுவில் விசேட நிருபர்)



போதை ஒழிப்பில் ஈடுபடும் பாதுகாப்பு தரப்பினருக்கும், பொலிஸாருக்கும் மதத் தலைவர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென, முஸ்லிம் காங்கிரஸ் பிரதிப் பொருளாளர் ஏ.சி. யஹியாகான் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, முஸ்லிம் சமுகத்தில் போதை ஒழிப்பை விரைவாக முன்னெடுப்பதற்கு மதத் தலைவர்கள், பள்ளிவாசல் தலைவர்கள் பிரதேச முக்கியஸ்தர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் இந்த போதை ஒழிப்புக்கு எதிராக ஒன்றுபட்ட வேண்டும்.

மிகவும் ஆபத்துமிக்க போதைப் பொருட்கள் இன்று முஸ்லிம் சமுகத்தை ஆட்கொண்டுள்ளது. அதிகளவான இளம் வயதினர் இந்த போதைக்கு அடிமையாகி சிறைச்சாலைகளில் அதிகளவான இளைஞர்கள் இருக்கின்றார்கள். இந்த துர்ப்பாக்கிய நிலையிலிருந்து முஸ்லிம் இளைஞர்களை மீட்பதோடு சிறந்த வழி காட்டல்களையும் வழங்க வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும். பிரதேசம் தோறும் விழிப்புணர்வை ஏற்படுத்தி அதற்காக செயற்படும் பொலிஸார் மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி உயர்தர உயிரியியல் பௌதீக விஞ்ஞான பிரிவுக்கு மடிக் கணினி அன்பளிப்பு



( மாளிகைக்காடு குறூப் நிருபர்)

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) உயர்தர உயிரியியல் பௌதீக விஞ்ஞான பிரிவின் தேவையின் பொருட்டு "பல்கீஸ் யூசுப் ஹமீட் அறக்கட்டளை" நிதி உதவியுடன் கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் உத்தியோகபூர்வமாக மடிக் கணினி அன்பளிப்பு(26)செய்து வைக்கப்பட்டது.

உயர்தர உயிரியியல் பௌதீக விஞ்ஞான பிரிவின் செயற்பாட்டை மேம்படுத்தல், தகவல் சேகரித்தல் மற்றும் இலத்திரனியல் முறையில் தகவல் பரிமாற்ற சேவையினை இலகுபடுத்தும் நோக்கில் அதிபரினால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைவாகவே மடிக் கணினி ஒன்று அன்பளிப்பு செய்யப்பட்டது. இதற்கான பிரதான அனுசரணையாளராக இக்கல்லூரியின் ஸ்தாபக அதிபர் ஏ. ஹமீட் அவர்களின் புதல்வியான பிரதி அதிபர் ஏ.எச். நதீரா (பாடவிதானம்) தலைமையில் இயங்கும் "பல்கீஸ் யூசுப் ஹமீட் அறக்கட்டளை" மூலம் மடிக் கணினி வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## காத்தான்குடி மில்லத் பெண்கள் உயர்தர பாடசாலையின் முப்பெரும் விழா

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடி கல்வி கோட்டத்திலுள்ள காத்தான்குடி மில்லத் பெண்கள் உயர்தர பாடசாலையின் முப்பெரும் விழா (28) வியாழக்கிழமை காத்தான்குடி ஹிஸ்புல்லா மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலையின் 95 ஆண்டு நிறைவு விழா பரிசளிப்பு விழா ஆசிரியர் கௌரவிப்பு விழா என்பன இடம்பெற்றன.

பாடசாலையின் அதிபர் திருமதி ஜெசீமா முஸம்மில் தலைமையில் நடைபெற்ற இந்த முப்பெரும் விழாவில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம் .எல் .ஏ. பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வி பணிப்பாளர் எஸ் எம் எம் அமீர் காத்தான்குடி கோட்டக் கல்வி பணிப்பாளர் ஏ. ஜே. எம் ஹக்கீம் காத்தான்குடி நகர சபை செயலாளர் திருமதி ரிஸ்கா ஷபீன் உட்பட கல்வி அதிகாரிகள் பிரமுகர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் பழைய மாணவிகள் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்

## காத்தான்குடி கடல் கொந்தளிப்பு; மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)



சீரற்ற காலநிலை காரணமாக மட்டக்களப்பு காத்தான்குடி கடல் கொந்தளிப்பாக காணப்படுவதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

கடல் கொந்தளிப்பு காரணமாக மீனவர்கள் கடலுக்கு சென்று மீன் பிடிக்க முடியாத நிலை காணப்படுவதால் மீன்பிடி படகுகள் கரையோரம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த சில தினங்களாக மீனவர்கள் கடலுக்கு செல்லாததால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.


இதே நேரம் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக காத்தான்குடியின் புதிய காத்தான்குடி பகுதியில் பல வீதிகள், தாழ்நிலப்பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

பல வீடுகளிலும் வெள்ள நீர் புகுந்துள்ளமையால் அவ்வீடுகளில் வசிப்போர் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.



முன்னாள் தோப்பூர் தினகரன் விசேட நிருபரும் சிறந்த ஊடகவியலாளரும் , சமூகசேவையாளருமான ஏ.எஸ்.எம்.தானீஸ் மூதூர் பிரதேச கலை விழாவில் கௌரவிக்கப்பட்டார். ஊடகத்துறைக்கு ஆற்றிய பெரும் பங்களிப்புக்காக திருகோணமலை மாவட்ட செயலாளரினால் பொன்னாடை போர்த்தி கலை முத்து விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். (படம் ; தோப்பூர் தினகரன் நிருபர்)

# தேசிய பளுதூக்கலில் ஆஷிகாவுக்குத் தங்கம்



பொலன்னறுவையில் நடைபெற்று வரும் சிரேஷ்ட வீரர்களுக்கான தேசிய பளுதூக்கல் சம்பியன்ஷிப்பில் பெண்களுக்கான 64 கிலோகிராம் எடைப்பிரிவில் பங்குகொண்ட வடக்கின் நட்சத்திர வீராங்கனை ஆஷிகா விஜயபாஸ்கர் தங்கப் பதக்கத்தை சுவீகரித்தார்.

இலங்கை பளுதூக்கல் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் 2023 ஆண்டுக்கான கனிஷ்ட, இளையோர் மற்றும் சிரேஷ்ட வீரர்களுக்கான தேசிய பளுதூக்கல் சம்பியன்ஷிப் போட்டித் தொடர் பொலன்னறுவையில் உள்ள கல்லேல்லவில் கடந்த 27ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது.

இதில் யாழ்ப்பாணம் பளுதூக்கல் கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பெண்களுக்கான 64 கிலோ கிராம் எடைப் பிரிவில் பங்குகொண்ட ஆஷிகா, ஸ்னெச் முறையில் 65 கிலோ கிராம் எடையையும், க்ளீன் எண்ட் ஜேர்க் முறையில் முறையில் 80 கிலோ கிராம் எடையும் தூக்கி ஒட்டுமொத்தமாக 145 கிலோ கிராம் எடையைத் தூக்கி தங்கப் பதக்கத்தை வெற்றி கொண்டார்.

2021ஆம் ஆண்டு வரை நடைபெற்ற தேசிய ரீதியிலான பளுதூக்கல் போட்டிகளில் 19 தடவைகள் தேசிய சாதனையை முறியடித்த ஆஷிகா, கடந்த 2 ஆண்டுகளாக எந்தவொரு தேசிய மட்டப் போட்டிகளிலும் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சட்டத்தரணிகள் கிரிக்கெட் உலகக் கிண்ணம் ஆரம்பம்



சட்டத்தரணிகள் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தலைமையில் கொழும்பு பீ. சரவணமுத்து மைதானத்தில் நேற்று முன்தினம் (28) ஆரம்பிக்கப்பட்டது.

எதிர்வரும் ஜனவரி 6ஆம் திகதி வரை நடைபெறும் இந்தப் போட்டியில் மொத்தம் பத்து அணிகள் பங்கேற்றுள்ளன. இதில் இலங்கையில் இருந்து இரு அணிகள் பங்கேற்பதோடு இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷில் இருந்தும் தலா இரண்டு அணிகள் பங்கேற்கின்றன.

தவிர இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் ஏனைய பொதுநலவாய நாடுகளை உள்ளடக்கிய பொதுநலவான அணி ஒன்று பங்கேற்றுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, இலங்கை முன்னாள் அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்க உட்பட பிரமுகர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

# பாகிஸ்தானை வீழ்த்தி ஆஸி. தொடர் வெற்றி




பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் 79 ஓட்டங்களால் வெற்றியீட்டிய அவுஸ்திரேலிய அணி மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 2–0 என கைப்பற்றியது.

மெல்போர்னில் நடைபெற்ற இந்த டெஸ்ட் போட்டியின் நான்காவது நாளான நேற்று 317 ஓட்ட வெற்றி இலக்குடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 237 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதன்போது ஆஸி அணித் தலைவர் பெட் கம்மின்ஸ் அபாரமாக பந்து வீசி 5 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு மிச்சல் ஸ்டார்க் 4 விக்கெட்டுகளை பதம்பார்த்தார். பாகிஸ்தான் அணியின் கடைசி மூன்று விக்கெட்டுகளும் டக் அவுட் ஆனமை குறிப்பிடத்தக்கது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட ஆஸி. அணி முதல் இன்னிங்ஸுக்கு 318 ஓட்டங்களை பெற்ற நிலையில் பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸில் 264 ஓட்டங்களை குவித்தது. 54 ஓட்டங்களால் முன்னிலை பெற்ற நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸி அணியின் முதல் 4 விக்கெட்டுகளையும் 16 ஓட்டங்களில் வீழ்த்த பாகிஸ்தான் அணியால் முடிந்த போதும் இறுதியில் அந்த அணி இரண்டாவது இன்னிஸில் 262 ஓட்டங்களை பெற்றது.

இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி ஜனவரி 3ஆம் திகதி சிட்னியில் ஆரம்பமாகவுள்ளது.

# உக்ரைனில் ரஷ்யா சரமாரித் தாக்குதல்



உக்ரைன் மீது ரஷ்யா 122 ஏவுகணைகள் மற்றும் 36 டிரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளது. கிட்டதட்ட 13 பேர் இதில் பலியாகியுள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

போர் ஆரம்பித்த 22 மாதங்களில் இதுபோன்ற சரமாரியான தாக்குதல் எட்டு மாதங்களுக்குப் பின் இப்போதுதான் நடந்துள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை (28) இரவு ஆரம்பித்து சரமாரியான வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி, உக்ரைன் 87 ஏவுகணைகள் மற்றும் 27 சாஹெத் வகை ட்ரோன்களைத் தடுத்து அழித்ததாகத் தெரிவித்துள்ளார்.

18 மணி நேரம் தொடர்ந்த இந்தத் தாக்குதலில் பல கட்டடங்கள், பாடசாலைகள், மருத்துவமனைகள் சேதமடைந்ததாக உக்ரைன் கூறியது.

# கொண்டாட்டத்திற்கு பாகிஸ்தான் தடை



காசாவில் உள்ள பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக பாகிஸ்தானில் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. புத்தாண்டை எளிமையாகக் கொண்டாடும்படி நாட்டு மக்களை அது கேட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இரவு தொலைக்காட்சியில் தோன்றிய பிரதமர் அன்வார் உல் ஹக் ககார், காசா நிலைமை காரணமாக புத்தாண்டு கொண்டாட்டம் தொடர்பான அனைத்து வகையான நிகழ்ச்சிகளுக்கும் அரசு முழு தடை விதிக்கிறது என்றார்.

“பலஸ்தீன மக்கள் மீதான இனப்படுகொலை, குறிப்பாக காசா மற்றும் மேற்குக் கரையில் உள்ள அப்பாவி சிறுவர்கள் படுகொலை செய்யப்படுவது ஒட்டுமொத்த பாகிஸ்தான் மற்றும் முஸ்லிம் உலகை ஆழ்ந்த கவலைக்கு உட்படுத்தியுள்ளது” என்று அவர் தெரிவித்துள்ளார். ஏற்கனவே ஷார்ஜாவிலும் புத்தாண்டு கொண்டாட்டத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புத்தகாயவில் சர்வதேச பௌத்த மத மாநாடு



தெற்கு மற்றும் தென் கிழக்காசிய நாடுகளின் பௌத்த மதத் தலைவர்கள் பங்குபற்றிய சர்வதேச சங்க மாநாடு புத்தகாயவில் நடைபெற்றுள்ளது.

சர்வதேச பௌத்த கூட்டமைப்பும் தலாய் லாமா அலுவலகமும் இணைந்து ஏற்பாடு செய்த இந்த மூன்று நாட்கள் சங்க மாநாட்டை திபெத் ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளார்.

நவீனத்துவத்தை தழுவி பாரம்பரியங்களை இணைத்தல் என்ற தொனிப்பொருளில் நடைபெற்றுள்ள இம்மாநாட்டில் இந்தியா, தாய்லாந்து, மியான்மர், கம்போடியா, லாவோஸ், இலங்கை, பங்களாதேசம், இந்தோனேசியா, பூட்டான், நேபாளம், வியட்நாம், சீனா, தாய்வான், ஜப்பான், கொரியா, ரஷ்யா, மங்கோலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பௌத்த மதத் தலைவர்களும் புத்திஜீவிகளும் பங்குபற்றியுள்ளனர்.

## சர்வதேச செய்திகள்

### இஸ்ரேலிய படைகள் முன்னேறி வருவதால்

# மத்திய காசாவில் இருந்து ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றம்: கெய்ரோவில் தொடர்ந்தும் பேச்சு







இஸ்ரேலிய படைகள் அகதி முகாம்களை நோக்கி முன்னேறும் நிலையில் மத்திய காசா பகுதியில் இருந்து சுமார் 150,000 பேர் வரை தப்பிச் செல்ல வேண்டிய நெருக்கடிக்கு தள்ளப்பட்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை கணித்துள்ளது.

புரைஜ் அகதி முகாமின் கிழக்கு புறநகர் பகுதியாக இஸ்ரேலிய டாங்கிகள் நெருங்கியுள்ளதாக பார்த்தவர்கள் மற்றும் ஹமாஸ் ஆயுதப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலிய இராணுவம் புரைஜ் மற்றும் அருகிலுள்ள நுஸைரத் மற்றும் மகாசி அகதி முகாம்களுக்கு தனது தரைவழித் தாக்குதலை அண்மையில் விரிவுபடுத்தி இருந்தது.

காசாவெங்கும் இஸ்ரேலிய வான் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் தொடரும் நிலையில் மேலும் டஜன் கணக்கான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் நுஸைரத் மற்றும் மகாசி முகாம்களில் உள்ள வீடுகளை இலக்கு வைத்து வான் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இதில் இலக்கு வைக்கப்பட்ட வீடுகள் தவிர சுற்றி இருக்கும் நான்கைந்து வீடுகள் என சேதமடைந்துள்ளன. இந்தத் தாக்குதல்களில் 35க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

அதேபோன்று தெற்கு காசாவில் உள்ள குவைட்டி மருத்துவமனைக்கு அருகில் இருக்கும் குடியிருப்புக் கட்டடங்கள் மீது நேற்று இடம்பெற்ற மற்றொரு தாக்குதலில் குறைந்து 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் பலர் காணாமல்போயிருக்கும் நிலையில் அவர்கள் இடிபாடுகளில் சிக்கி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலிய தாக்குதல்களில் மேலும் 187 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த இடைவிடாத தாக்குதல்களால் கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி ஆரம்பமான போரில் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 21,500ஐ தாண்டியுள்ளது. 11 வாரங்களாக நீடிக்கும் இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பெரும்பாலானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர்.

இதன்படி காசா மக்கள் தொகையில் நான்கு வீதத்தினர் கொல்லப்பட்டு, காயமடைந்து அல்லது காணமல்போயுள்ளனர். காணாமல்போயிருக்கும் 7,000க்கும் அதிகமானவர்கள் இடிபாடுகளில் சிக்கி இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இந்நிலையில் மத்திய காசாவின் குறுகிய நிலப்பகுதியில் சுமார் 90,000 குடியிருப்பாளர்கள் மற்றும் 61,000 இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் நிலையில் அவர்களை அங்கிருந்து வெளியேற இஸ்ரேல் இராணுவம் உத்தரவிட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் டெயிர் அல் பாலாஹ்வுக்கு தெற்கை நோக்கி வெளியேறி வருகின்றனர்.

எவ்வாறாயினும் டெயிர் அல் பாலாஹ்வில் ஏற்கனவே அளவுக்கு அதிகமான மக்கள் நிரம்பி வழிவதாகவும், வெளியேற்றப்பட்ட ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு அடைக்கலம் பெற்றிருப்பதாகவும் ஐ.நா எச்சரித்துள்ளது.

இஸ்ரேலின் தரைவழித் தாக்குதல்கள் புதிய இடங்களுக்கு பரவி வரும் நிலையில் காசாவில் சனநெரிசல் மிக்க பகுதியாக மாறி இருக்கும் ராபாவுக்கு கடந்த சில நாட்களில் புதிதாக சுமார் 100,000 பேர் வரை அடைக்கலம் பெற்றிருப்பதாக ஐ.நா கூறியது.

புரைஜில் இருந்து குறைந்தது தனது 35 குடும்ப உறுப்பினர்களுடன் வெளியேற்றப்பட்டதாக 60 வயது ஒமர் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

“எப்போதும் வரக்கூடாது என்று பிரார்த்தித்த அந்தத் தருணம் வந்துவிட்டது. என்றாலும் வெளியேறுவது கட்டாயமாகிவிட்டது” என்று ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு அவர் தெரிவித்தார். “இஸ்ரேலின் இந்த கொடிய போரினால் நாம் இப்போது டெயிர் அல் பாலாஹ்வில் கூடாரம் ஒன்றில் இருக்கிறோம்” என்று தொலைபேசி வழியாக அவர் கூறியுள்ளார்.

படுகொலை இரவுகள் தொடர்வதாக விபரிக்கும் உள்ளூர் மக்கள், தற்காலிக முகாம்களில் இருந்தும் இடம்பெயரும் சூழல் உருவாகியுள்ளதாக கூறுகின்றனர்.

எங்கு சென்றாலும் மரணம் எனில் வீட்டிலேயே உயிர் போகட்டும் என்று தெரிவித்துள்ளார் புரைஜ் அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் ராமி அபு மோசப்.

இஸ்ரேல் தரைவழியில் தனது இராணுவ படையை அனுப்புவதற்கு முன்பாக அந்தப் பகுதிகளில் தொடர் குண்டுவீச்சை நிகழ்த்துகிறது.

இத்தனை விரிவான மற்றும் தீவிரமான தாக்குதல் மக்களுக்குத் தேவையான வாழ்வாதார உதவிகளைக்கொண்டு சேர்ப்பதில் தடையை ஏற்படுத்துவதாக ஐ.நா தெரிவித்துள்ளது. காசாவில் நான்கில் ஒருவர் பசியில் இருப்பதாக அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

தெற்கு காசா நகரான ரபாவை நோக்கி மேலும் மேலும் மக்கள் வெளியேற்றப்பட்டு வருகிறார்கள் என்று ஐக்கிய நாடுகள் நிவாரண மற்றும் பணிகள் நிறுவனத்தின் காசா பணிப்பாளர் டொம் வைட் தெரிவித்துள்ளார். “மிகக் குறுகிய நிலப்பகுதிக்குள் அதிகமான மக்கள் நிரம்பி இருப்பது அவர்களுக்கு உதவாது” என்றார்.

இஸ்ரேலிய தரைப்படை காசாவில் தொடர்ந்தும் கடும் எதிர்ப்பை சந்தித்து வருகிறது. இஸ்ரேலிய படையினர் மற்றும் வாகனங்களை தமது போராளிகள் இலக்கு வைப்பதாகக் கூறும் வீடியோ ஒன்றை ஹமாஸ் வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று மேலும் ஒரு இஸ்ரேலிய வீரர் காசாவில் கொல்லப்பட்டார். வடக்கு காசாவில் இடம்பெற்ற மோதலில் 551 ஆவது படைப் பிரிவின் 7008 ஆவது பட்டாலியனைச் சேர்ந்த 33 வயது கெப்டன் ஹறெல் ஷர்வித் என்பவரே கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது.

இதன்மூலம் கடந்த ஒக்டோபர் பிற்பகுதியில் தரைவழி தாக்குதலை ஆரம்பித்தது தொடக்கம் காசாவில் கொல்லப்பட்ட இஸ்ரேலிய துருப்புகளின் எண்ணிக்கை 169 ஆக அதிகரித்துள்ளது.

**ஹமாஸ் எகிப்து விரைவு**

இஸ்ரேலிய தரைவழி படை தாக்குதலை நடத்திய வடக்கு காசா தற்போது பெரும் அழிவை சந்தித்திருக்கும் நிலையில் அந்தத் தரைப்படை மேலும் தெற்காக முன்னேறி வரும் நிலையில் மத்திய கிழக்கு பிராந்தியம் எங்கும் பதற்றம் அதிகரித்து வருகிறது.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றுக்கான திட்டத்தை எகிப்து அண்மையில் வெளியிட்டிருந்த நிலையில் அது தொடர்பில் தமது நிலைப்பாட்டை கூறுவதற்கு ஹமாஸ் தூதுக்குழு ஒன்று நேற்று எகிப்து தலைநகர் கெய்ரோவை சென்றடைந்துள்ளது.

இந்தத் திட்டத்தில் புதிய போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவது, இஸ்ரேலிய சிறைகளில் இருக்கும் பலஸ்தீன கைதிகளுக்கு பகரமாக ஹமாஸ் பிடியில் இருக்கும் இஸ்ரேலிய பணயக் கைதிகளை விடுவிப்பது மற்றும் இறுதியாக போரை முடிவுக்குக் கொண்டுவருவது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

போருக்குப் பின்னராக காசவை கட்டியெழுப்புவது மற்றும் நிர்வகிப்பதற்கான பொறுப்பு வகிக்கும் வகையில் அனைத்து பலஸ்தீன தரப்புகளையும் தொடர்புபடுத்திய பேச்சுவார்த்தை ஒன்றுக்குப் பின்னர் துறைசார் வல்லுநர்களைக் கொண்ட அரசு ஒன்றை அமைப்பது பற்றியும் அதில் கூறப்பட்டுள்ளது.

இதில் இஸ்ரேலிய இராணுவம் முழுமையாக வாபஸ் பெறுவதற்கான உத்தரவாதங்கள் மற்றும் கைதிகள் பரிமாற்றம் தொடர்பிலான பல்வேறுபட்ட அவதானிப்புகள் உட்பட பலஸ்தீன தரப்புகளின் பதிலை கெய்ரோ சென்றிருக்கும் தூதுக்குழு வழங்கும் என்று ஹமாஸ் தரப்பை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பலஸ்தீனிய இரத்தம் சிந்தப்படுவதை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரின் கருத்துகளையும் ஒன்றிணைக்க எதிர்பார்ப்பதாக எகிப்தின் அரச தகவல் சேவைகளின் தலைவர் டியா ரஷ்வான் தெரிவித்துள்ளார்.

எனினும் காசா முழுவதும் காலவரையின்றி இஸ்ரேல் சில வகையில் பாதுகாப்பு கட்டுப்பாடுகளை வைத்திருக்கும் என்று குறிப்பிட்டுள்ள இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, அது அந்தப் பகுதி மீதான மீள் ஆக்கிரமிப்பாக அமையாது என்று கூறியுள்ளது.

காசாவில் எஞ்சி இருக்கும் 129 பணயக் கைதிகளையும் விடுவிப்பதே இந்தப் போரின் பிரதான நோக்கங்களில் ஒன்று என்று இஸ்ரேல் தொடர்ந்து கூறி வருகிறது. எனினும் ஹமாஸ் அமைப்பை அழித்தொழிப்பதாக அது சூளுரைத்துள்ளது.

இந்தப் போர் பிராந்தியத்தில் மோதலைத் தூண்டியுள்ளது. குறிப்பாக யெமனின் ஈரான் ஆதரவு ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் செங்கடலில் செல்லும் வர்த்தகக் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

ஹூத்திக்களால் அனுப்பப்பட்ட ஒரு ஆளில்லா விமானம் மற்றும் கப்பல் எதிர்ப்பு பலிஸ்டிக் ஏவுகணை ஒன்றை சுட்டு வீழ்த்தியதாக அமெரிக்க இராணுவம் நேற்று முன்தினம் (28) கூறியது. இது கடந்த ஒக்டோபர் 19 ஆம் திகதி தொடக்கம் அந்தக் கிளர்ச்சியாளர்களால் சர்வதேச கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தும் 22ஆவது முயற்சியாக இருந்தது என்றும் அமெரிக்க இராணுவம் கூறியது.

தாக்குதல் இடம்பெறும்போது அந்தப் பகுதியில் இருந்த எந்த ஒரு கப்பலுக்கோ அல்லது நபர்களுக்கோ பாதிப்பு ஏற்படவில்லை என்று அமெரிக்க மத்திய கட்டளையகம் எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளது. மறுபுறம் சிரிய தலைநகர் டமஸ்கஸுக்கு அருகிலும் தெற்கு சிரியாவிலும் இஸ்ரேல் வியாழனன்று தாக்குதல்களை நடத்தி இருப்பதாக சிரிய அரச தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது.

இதில் தெற்கு சுவைதா மாகாணத்தில் உள்ள சிரிய வான் பாதுகாப்பு நிலை ஒன்று மற்றும் டமஸ்கஸுக்கு அருகில் உள்ள சர்வதேச விமானநிலையம் ஒன்றை இலக்கு வைத்து இஸ்ரேலின் வான் தாக்குதல்கள் இடம்பெற்றிருப்பதாக மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

தினகரன் THINAKARAN | தினகரன் வாரமஞ்சரி | ஊடக அனுசரணையுடன் | SHANGKAVI FILMS

# டவர் மண்டப நாடக விழா




























மாற்றமுறும் உலகுக்கு ஏற்ப மாசற்ற ஊடக கலாசாரத்துடன் கடந்த 90 வருட காலமாக வாசகர்களின் நெஞ்சங்களை கவர்ந்து வரும் பத்திரிகை தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகை. கலைஞர்களை ஊக்கப்படுத்த கலைஞர்களின் பேட்டிகளையும் கலைஞர்கள் தொடர்பான செய்திகளையும் பிரசுரித்து வரும் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகை, வரலாற்றில் முதற்தடவையாக அரச நாடக விழாவொன்றுக்கு ஊடக அனுசரணை வழங்கி கலைஞர்களையும் அதனை நடத்திய டவர் மண்டப அரங்க மன்றத்தையும் கல்வி அமைச்சையும் உற்சாகப்படுத்தி கடந்த 2023.12.28ஆம் திகதி கொழும்பு 10, மருதானை, எல்பிஸ்ட்டன் மண்டபத்தில் நடைபெற்ற டவர் மண்டப நாடக விழாவுக்கு ஊடக அனுசரணை வழங்கியது. இவ்விழாவில் வெற்றிக் கொடி கட்டிய கலைஞர்களுக்கு ஜூரி விருதுகளை வழங்க சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தினது பணிப்பாளரும் மன்னார், பேசாலை சங்கவி தியேட்டர் உரிமையாளருமான துரைராசா சுரேஸை, அனுசரணையாளராக்கிய பெருமையும் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளையே சாரும். அதுமட்டுமன்றி, திருமதி இளங்கோவன் செல்வராணியை ஆசிரியராகக் கொண்டு இயங்கும் வத்தளை கலைத்தென்றல் நாட்டியக் கலா நிலைய மாணவிகளின் நடனத்தை இவ்விழாவில் மேடையேற்ற சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்துடன் உறுதுணையாக இருந்ததும் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையே.



